வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 14.03.2023 வியாழக்கிழமை | இதழ் : 97 | பக்கங்கள் : 16

## தென்னிந்திய நகரங்களுக்கு யாழிலிருந்து விமான சேவை

### இந்திய துணைத்தூதுவர்

*யாழ்ப்பாணம், மார்ச் 16*

யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்தி லிருந்து தென்னிந்தியாவின் ஏனைய நகரங்களுக்கும் சேவையை விஸ்தரிக்க தீர்மா னித்துள்ளோம். இதேபோன்று, யாழ்பாணம் - கொழும்பு விமான சேவையை ஆரம்பிப் பது தொடர்பில் ஆராயப் படுகிறது என்று யாழ்ப்பாணத் துக்கான இந்தியத் துணைத்தூ துவர் ராகேஷ் நட்ராஜ் ஜெய பாஸ்கரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட் டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் நடை

15

## பறிபோனது கன்னியா; வரலாறும் மாறியது!




*திருகோணமலை, மார்ச் 16*

இந்து தமிழர்களின் மிக முக்கியமான புராதன இடங்களில் ஒன்றான திரு கோணமலை - கன்னியா வெந்நீரூற்று தொல் பொருள் திணைக் களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன் வருமான முகாமை மற்றும் பராமரிப்பு தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமாகி யுள்ளது. இதைத் தொடர்ந்து, வெந்நீரூற்றை

15

## கன்னியா வெந்நீரூற்றின் கதையும் முடிந்ததா?

திருகோணமலை கன்னியாவில் அமைந்துள்ள வெந்நீரூற்று இந்துக்களின் தொல்பொருள் அடையாள சின்னமாகும். இதற்கும் வரலாற்று தொன்மைமிக்க திருக் கோணேஸ்வர ஆலயத்துக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. இவைகள் திருகோணமலையில் சிவ வழி பாட்டை ஆதாரப்படுத்தும் அடையாளங்களாகும். அதிக ரித்திருக்கின்றது. பிறிதொரு புறம் வரி விதிப்புக்கு எதி ராக, இன்று முதல் தொழில்சங்க நடவடிக்கைகளில் ஈடு படவுள்ளதாக தொழில்சங்கங்கள் அறிவித்திருக்கின்றன.

(3 ஆம் பக்கம் பார்க்க)

# நாடு முழுவதும் நேற்று பொது வேலைநிறுத்தம்!








- பொதுமக்கள் பெரும் திண்டாட்டம்
- வடக்கு - கிழக்கும் செயலிழந்தன
- 65வீதத்தினர் பணிப்புறக்கணிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 16**

**வடக்கு - கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடு முழுவதும் நேற்று வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தால் அரச - அரச அனுசரணையில் இயங்கும் துறைகள் பல இயங்க வில்லை. இதனால், பொது மக்கள் தமது அன்றாடப் பணிகளை முன்னெடுப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.**

15

## இன்று காலை முதல் பணிகள் வழமைக்கு!

### தொழில்சங்கங்கள் அறிவிப்பு

*கொழும்பு, மார்ச் 16*

இன்று வியாழக் கிழமை காலை 8 மணி முதல் அனைத்து அரச - அரச அனுசரணை பெற்ற சேவைகளும் வழமை போன்று இயங்கும் என்று தொழில்சங்கங்கள் அறி வித்துள்ளன.

தமது கோரிக்கை களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்துக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என் றும் அவை தெரிவித்தன.

மேலும், தமது கோரிக் கைகளை நிறைவேற்று வது தொடர்பில் ஜனாதி பதியின் செயலாளர் கடிதம் ஒன்றை அனுப்பி யுள்ளார் என்றும் கூறின.

நேற்றைய தினம் 47 பிர தான தொழில் சங்கங்கள் இணைந்து சில கோரிக்கைகளை முன் வைத்து பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன. (ஐ)

## பணிப்புறக்கணிப்பு தோல்வியில் முடிந்தது

### ஜனாதிபதியின் தொழில்சங்க பணிப்பாளர்

*கொழும்பு, மார்ச் 16*

நேற்றையதினம் முன் னெடுக்கப்பட்ட தொழில் சங்கம் தோல்வி யடைந்ததாக ஜனாதி பதியின் தொழில் சங்கங்க ளுக்கான பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப் பிரிய தெரிவித்தார்.

ஒரு சில தொழில் சங்கங்கள் மாத்திரமே தொழிற்சங்க நடவடிக் கை யில் ஈடுபட்டன.



ஆர்ப்பாட்டங்கள் முன் னெடுக்கப்பட்டுள்ள போதிலும், பணிப் பகிஷ்கரிப்பு முழுமையாக

15

## ஷஹ்ரானின் மனைவிக்கு பிணை!

*கல்முனை, மார்ச் 16*

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குத லின் பிரதான சூத்திரதாரியென கூறப் படும் சஹ்ரான் ஹாசிமின் மனைவி பாத்திமா ஹாதியாவை பிணையில் விடுவித்தது கல்முனை மேல் நீதிமன் றம்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இவர் தொடர்பான வழக்கு நேற்று கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜெயராம் ட்ரொக்ஸி முன்லையில் விசாரணைக்கு எடுக்கப்பட் டது.

நீண்ட வாதப் பிரதிவாதங்களின் முடிவில் 4 வருடங்களாக விளக்கமறிய லில் இருத்தல் மற்றும் பிற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு பாத்திமா வுக்கு பிணை வழங்கப்பட வேண்டும் என்று அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், 25

15

## அமைச்சரவை மாற்றம் குறித்து பேசப்படுகிறது

### பொதுஜன பெரமுன சொல்கிறது

*கொழும்பு, மார்ச் 16*

தற்போதைய அமைச் சரவையை மாற்றியமைப் பது தொடர்பில் கலந்து ரையாடப்பட்டு வருவ தாக முன்னாள் அமைச்ச ரும் சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் பாரா ளுமன்ற உறுப்பினர் எஸ். எம். சந்திரசேன தெரிவித் தார்.

நேற்றைய தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அமைச்சரவை மாற் றத்துக்கு ஏற்ற நேரம் இதுவென்றும் தகுதி யான பலர் தற்போது அமைச்சு இல்லாமல் இருக்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

கடந்த சில வாரங்க ளாக அமைச்சரவை மறுசீரமைப்புக்கு பல முன்னாள் அமைச்சர்கள் அழைப்பு விடுத்துள்ள நிலையில், அமைச்சரவை மாற்றம் குறித்து இப்போது மீண்டும் பேச்சு எழுந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

இதேவேளை,

15

# இப்படியும் நடக்கிறது...!

உள்ளூராட்சி தேர்தலுக்காக இரண்டாவது தடவையும் திகதி அறிவிக்கப்பட்டபோதே, தேர்தல் நடைபெறுமா என்ற சந்தேகத்தை நாம் வெளிப்படுத்தியிருந்தோம்.

அதேபோலவே, தேர்தல் மீண்டும் ஒரு தடவை ஒத்திவைக்கப்படலாம் என்பது இப்போது உறுதியாகி வருகின்றது. போதாக்குறைக்கு, உரிய முறையில் அறிவிப்பு செய்யப்பட்டு தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதியும் தெரிவித்திருக்கிறார்.

'அறிவிப்பே இல்லாத உள்ளூராட்சி சபை தேர்தல் எதிர்காலத்தில் ஒழுங்கான அறிவிப்பு விடுக்கப்பட்டு நடைபெறும்' என்கிறார் அவர். தேர்தல் தொடர்பாக ஏற்கனவே வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்ட போதிலும் ஜனாதிபதியோ அதனை உரிய அறிவிப்பு இல்லாத தேர்தல் என்கிறார்.

ஆக, உள்ளூராட்சி தேர்தல் என்பது அண்மைக்காலத்தில் நடக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. வரும் பத்தொன்பதாம் திகதி முதல் மாநகர சபைகள் ஆணையாளரின் கீழும், நகரசபை, பிரதேச சபைகள் செயலாளர்களின் நிர்வகத்தின் கீழும் வந்துவிடும் என்று எதிர்பார்க்கலாம். ஆக, மக்கள் பிரதிநிதிகளால் அன்றி அரச அலுவலர்களால் அவை நிர்வகிக்கப்படவிருக்கின்றன.

இந்தப் பத்தியை எழுதிக்கொண்டிருக்கும்போது இரண்டு பிள்ளைகளின் தந்தையான நண்பர் ஒருவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு கொஞ்சம் கோபமாகவே பேசினார்.

'தினமும் இந்த கோதாரி தமிழ் கட்சிகளைப் பற்றியே எழுதிக் கொண்டிருக்கின்றீர்களே. கடந்த சில நாட்களாக தொழில்சங்கங்கள் தொடர்ந்து வேலைகளை புறக்கணித்துக்கொண்டு, அரசியல்வாதிகளுக்குப் போட்டியாகத் தாமும் மக்களைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறார்களே. அதைப்பற்றி ஏதும் எழுதுகிறீர்கள் இல்லையே' என்றார் சினத்துடன். இந்தப் போராட்டங்கள் தொடர்பாக இரண்டு ஆசிரியர்கள் கூட சில தினங்களுக்கு முன்னர் என்னிடம் தமது எரிச்சலை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

கோட்டாபய அரசாங்கம் வரிகளை இரத்துச் செய்த பின்னர், நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது, வரிகளை இரத்துச் செய்ததால்தான் நாடு பொருளாதார நெருக்கடியை சந்தித்தது என்று கூக்குரலிட்டவர்கள், இப்போது ரணில் அரசாங்கம் வரிகளை விதிக்கின்றபோது அதற்கு எதிராகவும் கூக்குரலிடுகின்றார்கள்.

சரி, அதுதான் இருக்கட்டும், இப்போது ஆசிரியர்களும் இந்தப் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள். இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்து, பாடசாலைகளை மூடச் செய்திருக்கிறார்கள். கொரோனா பெருந்தொற்று, பின்னர் 'அறகலய' என்று நாடு தொடர்ந்து அல்லோலகல்லோலப்பட்டதால் பாடசாலைகள் ஒழுங்காக இயங்கவில்லை. கடந்த ஆண்டுக்கான மூன்றாம் தவணை மற்றும் ஆண்டிறுதி பரீட்சைகளும் கணிப்பீடுகளும் இப்போதுதான் நடந்துகொண்டிருக்கின்றன.

தெற்கில் இலங்கை ஆசிரியர் சங்கம் இந்தப் போராட்டத்தை அறிவித்தது. அந்த சங்கம் எந்த அரசியல் கட்சியின் பின்னணியில் இயங்குகின்றது என்பதும் இரகசியமானதல்ல. அதன் பொதுச் செயலாளராக இருக்கும் ஜோசப் ஸ்ராலின் எப்போதாவது அசிரியராக பாடசாலையில் பணியாற்றினாரா என்பதும் தெரியவில்லை.

இந்த சங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவரே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகர சபை முதல்வர் வேட்பாளர். அந்த சங்கம் முன்னெடுக்கும் போராட்டங்களால் தமிழ் மாணவர்களின் கல்வி தொடர்ந்தும் பாதிக்கப்படுவது தொடர்பாக அந்தக் கட்சியின் நிலைப்பாடு என்ன என்பதும் தெரியவில்லை. அதுவல்ல நாம் இன்று இந்தப் பத்தியில் சொல்ல வருவது.

இந்தப் போராட்டத்தில் நமது தமிழர் ஆசிரியர் சங்கமும் சேர்ந்து கொண்டிருக்கின்றது. கடந்த பல தசாப்தங்களாக நமது மண்ணில் இடம்பெற்ற யுத்தத்தால் நமது கல்வி முற்றிலுமாக சீரழிந்து, இப்போதுதான் சற்று தலைநிமிரத் தொடங்கியிருக்கின்றது. இந்த நேரத்திலும் இதுபோன்று பாடசாலைகளை இழுத்து மூடி போராட்டம் நடத்துவதால் சாதிக்கப்போவது என்ன என்று அவர்களைக் கேட்காமல் இருக்க முடியவில்லை. எதிர்கால சந்ததியின் கல்வியைப் பாழாக்கி நடத்தப்படும் இந்த போராட்டங்களால் - ரணிலுக்கோ, ராஜபக்ஷவுக்கோ, அரசாங்க அமைச்சர்களுக்கோ தனிப்பட்ட முறையில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தமுடியும் என்பதையும் அவர்கள் விளக்கவில்லை. இந்தப் போராட்டங்களால் பாதிக்கப்படப் போவது எமது நாட்டின் சாதாரண குடிமக்களே அன்றி வேறு எவரும் அல்ல என்பதே உண்மை.

தமிழகத்தில் இடதுசாரிக் கட்சிகள் இதுபோன்ற போராட்டங்களை நடத்துகின்றபோது வீதியில் நின்று போராடுவார்களே தவிர, பாடசாலைகள் மூடப்படுவதை அனுமதிப்பதில்லை. அந்த பெரும் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த மிக நெருக்கடியான காலத்தில்கூட, பாடசாலைகள் சீராக இயங்குவதை விடுதலைப் புலிகளும் ஏனைய போராட்ட இயக்கங்களும் எப்போதும் உறுதிப்படுத்தின.

ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும் என்பதிலோ அல்லது அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்பதிலோ மாற்றுக்கருத்து இருக்கமுடியாதுதான். ஆனால், அது தொடர்பான கோரிக்கையை முன்வைப்பதற்கும் அதற்கான போராட்டங்களை நடத்துகின்றபோதும் சரியான முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.

நாடு இன்று பாரிய பொருளாதார நெருக்கடியில் இருக்கும்போது அந்த நெருக்கடியிலிருந்து நாடு மீண்டெழ நாமும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டுமே தவிர, உடனடியாக ஈடேற்ற முடியாத கோரிக்கைகளை முன்வைப்பதற்கு இது சரியான நேரமா என்பதையும் யோசிக்க வேண்டும்.

கோட்டாபய ஆட்சியில் இருந்துபோது தமக்கு சொல்லொணா துன்பங்கள் ஏற்பட்டபோது, மக்கள் அதற்கு எதிராக வீதிக்கு வந்தார்கள். ஆனால், இன்று போராட்டங்கள் என்ற பெயரில் தம் மீது துன்பங்கள் சுமத்தப்படும்போது மக்கள் எரிச்சல்படுகின்றார்கள். போராட்டக்காரர்களுக்கு எதிராகவே மக்கள் வீதிக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதனை அறிந்ததால்தானோ தெரியவில்லை. ஜே. வி. பியின் தொழில்சங்க பிரிவு தலைவர் லால் கந்த, தொழில்சங்கங்களின் நேற்றைய ஒருநாள் போராட்டத்துக்கு மாத்திரமே தாங்கள் ஆதரவு வழங்குவோம் என்று தெரிவித்திருக்கிறார்.!

**- ஊர்க்குருவி**

# மாணவருக்கு பாலியல் துன்புறுத்தல் கும்பலை கைது செய்ய நடவடிக்கை!

யாழ்ப்பாணம், மார்ச் 16

பாடசாலை மாணவர்களை தொடர்ச்சியாக பாலியல் ரீதியாக துன்புறுத்தி வந்த கும்பல் ஒன்றை கைது செய்வதற்கு யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு இரகசிய தகவல்கள் கிடைக்கப்பெற்ற நிலையில், அந்த கும்பலை கைது செய்ய உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் புறநகர பகுதி ஒன்றின் பாடசாலையில் மாணவர்கள் சிலரை கும்பல் ஒன்று பாலியல் ரீதியாக துன்புறுத்தியது. ஒரே பாலின துன்புறுத்துதலுக்கு உட்படுத்திய அந்த நபர்கள் அவற்றை கைபேசிகளில் ஒளிப்பதிவு செய்து அவற்றை காண்பித்து தொடர்ச்சியாக துன்புறுத்தி வந்துள்ளமை தெரிய வந்துள்ளது. அத்துடன், அந்த காணொலியை காட்டி மிரட்டி பணமும் பறித்து வந்துள்ளனர்.

இவை குறித்த தகவல்கள் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற நிலையில், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அக்கும்பலை சேர்ந்தவர்களை அடையாளம் கண்டுள்ளனர் என்றும் விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.(ஐ-3)

# அறநெறி கல்விக்கு இடையூறு; இந்து மத பீடத்தினர் கவனவீர்ப்பு!



மன்னார், மார்ச் 16

மன்னார் மாவட்டத்தில் ஞாயிறு அறநெறிப் பாடசாலைகளுக்கு வருகை தரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இந்த நிலையில் ஞாயிற்றுக் கிழமைகளில் அறநெறி கல்வி கற்றலுக்கான நேரங்களில் நடைபெறும் ஏனைய பிரத்தியேக வகுப்புகளை நிறுத்துமாறு கோரி அடையாள கவனவீர்ப்பு போராட்டம் நேற்று நடைபெற்றது.

இந்து மத பீடத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட செயலகம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஞாயிறுதோறும் அறநெறிப் பாடசாலைகளில் ஆன்மிக கல்வி கற்பிக்கப்படும் நேரத்தில் சில பாடசாலைகளிலும், கல்வி நிலையங்களிலும், வீடுகளிலும் பிரத்தியேக வகுப்புக்கள் நடப்பதால் அறநெறிப் பாடசாலைகளில் மாணவர்களின் வருகை குறைவடைந்துள்ளது.

இதனை கருத்திற்கொண்டு ஏனைய பிரத்தியேகமான கல்வி வகுப்புக்களை ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணி முதல் 11 மணி வரை நிறுத்தி, ஆன்மிக கல்வியை கற்பதில் மாணவர்கள் ஈடுபட இடமளிக்குமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் வடக்கு மாகாண ஆளுநருக்கு கையளிக்கும் வகையில் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமேலிடம் இந்துமத பீடத்தினர் கையளித்தனர். (ஐ)

# இலவச கண்புரை சத்திர சிகிச்சை

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிர தேசங்களில் வாழும் கண் புரை சத்திரசிகிச்சை மேற் கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவச கண்புரை சத்திர சிகிச்சை நடைபெறவுள்ளது.

இதற்கான நோயாளர்களை தெரிவுசெய்யும் மூன்றாவது கண்பரிசோதனை முகாம்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் அனலைதீவு பிரதேச மருத்துவமனை, அம்பன் பிரதேச மருத்துவமனை மற்றும் மருதன்கேணி பிரதேச மருத்துவமனைகளில் நடைபெறவுள்ளது.

கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் இந்த கண்பரிசோதனை முகாம்களில் கலந்து கொண்டு தங்கள் பெயர்க ளைப் பதிவு செய்துகொள்ளுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ஐ)

# பலாலி மீள்குடியேற்றம் தொடர்பாக களப்பயணம்



யாழ்ப்பாணம், மார்ச் 16

பலாலியில் கடந்த பெப்ரவரி 3ஆம் திகதி 108 ஏக்கர் காணிகள் மீள்குடியேற்ற வசதிகளை மேற்கொள்வதற்காக விடுவிக்கப்பட்டன. இங்கு, தற்காலிக முகாம்களில் வசித்து வரும் குடும்பங்களின் மீள் குடி யேற்றத்துக்கு திட்ட முன் னெடுப்புக்களை யாழ். மாவட்ட செயலகம் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையில், பலாலியில் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் பார்வையிடும் முகமாகவும் தற்காலிக வீட்டுத் திட்டங்களை வழங்குவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கும் 'றகாமா' நிறுவனமும் நோர்வேயை தளமாகக் கொண்டு இயங்கும் போரூட் நிறுவனமும் இணைந்து நேற்றுமுன்தினம் களப்பயணம் மேற்கொண்டன.

இதன்போது தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவசிறி, றகாமா நிறுவன பணிப்பாளர் மரிக்கார், நோர்வே போரூட் அமைப்பின் திட்ட அமைப்பாளர் அனா, பலாலி கிராமசேவகர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
16.03.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 01

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கன்னியா வெந்நீரூற்றின் கதையும் முடிந்ததா?

(முதலாம் பக்க தொடர்ச்சி)

ஆனால், கன்னியா வெந்நீரூற்று பகுதியில் அமைந்துள்ள இந்துக்களுக்கு சொந்தமான ஆலயமொன்றை புனரமைக்க முற்பட்டவேளையில், அப்பகுதி பிக்குவின் தலையீட்டால் நெருக்கடிகள் ஏற்பட்டன. இதனைத் தொடர்ந்து அங்குள்ள அடையாளங்கள் அநுராதபுர காலத்தின் பௌத்த வழிபாட்டுக்கு உரியதென்று தொல்பொருள் திணைக்களம் அறிவித்திருந்தது. இதனைத் தொடர்ந்து 2011இல் வெளியிடப்பட்ட அரச வர்த்தமானிக்கு அமைவாக குறிப்பிட்ட இடம் பாதுகாக்கப்பட வேண்டிய தொல்பொருள் பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

எனினும் இந்தப் பகுதியின் நிர்வாகம் பிரேதச சபையின் ஆளுகைக்கு உட்பட்டதாகவே இருந்தது. பின்னர் சிறிது காலம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்தது. எனினும், உத்தியோகபூர்வமாக வெந்நீரூற்றின் நிர்வாகம் பிரேதச சபைக்கு உட்பட்டதாகவே இருந்தது. இந்த நிலையில் கன்னியா வெந்நீரூற்று தற்போது திருகோணமலை தொல்பொருள் திணைக்களத்தின் வருமான முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வரப்படுவதாக திணைக்களம் ஊடக அறிக்கையொன்றின் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றது. இதன் மூலம் கன்னியா வெந்நீரூற்றிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானங்கள் அனைத்தும் நேரடியாக மத்திய அரசின் கீழ் கொண்டு செல்லப்படவுள்ளது.

இங்கு விடயம் வருமானமல்ல – மாறாக, கன்னியா வெந்நீரூற்றின் நிர்வாகம் முற்றிலும் மத்திய அரசின் கீழ் கொண்டுசெல்லப்படவுள்ளது. ஏற்கனவே, குறித்த பகுதியின் கட்டுப்பாட்டை முற்றிலுமாக பிரேதச சபை இழந்திருக்கும் நிலையில், தற்போது வெந்நீரூற்றின் நிர்வாகமும் உத்தியோகபூர்வமாக தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் சென்றுவிட்டது. இனி அந்தப் பகுதியில் பிரேதச சபை எந்தவொரு தலையீட்டையும் முன்னெடுக்க முடியாது.

திருகோணமலை கோணேஸ்வரம் ஆலயத்தையும் இவ்வாறானதொரு நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் கொண்டு செல்லும் திட்டத்துடனேயே விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன. கிழக்கு மாகாண ஆளுநரும் இந்த விடயத்தில் கூடுதல் ஆர்வத்தை காண்பித்திருந்தார். எனினும், விடயம் பல்வேறு மட்டங்களில் விவாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தொல்பொருள் திணைக்களம் சற்று பின்வாங்கி அமைதியானது. குறிப்பாக இந்திய தூதுவர் திருக்கோணேஸ்வரத்துக்கு சென்று விடயங்களை மேற்பார்வை செய்திருந்தார். பின்னர் அமெரிக்க தூதுவரும் ஒருமுறை சென்றிருந்தார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்துக்களின் ஆலயமொன்றின் மீது அத்துமீறல்கள் மேற்கொள்ளப்படுவதான பார்வை, சர்வதேசளவில் முன்வைக்கப்பட்டது. இதனால் விடயம் நிறுத்தப்பட்டது. ஆனால், முற்றிலும் நிறுத்தப்பட்டுவிட்டதென்று கூறிவிட முடியாது.

தற்போது திருகோணமலை இந்துக்களின் வரலாற்றோடு பின்னிப்பிணைந்துள்ள கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியின் நிர்வாகம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று இன்னும் சில வருடங்களில் கோணேஸ்வர ஆலயத்தின் மீதும் இவ்வாறானதோர் அணுகுமுறை முன்னெடுக்கப்படலாம். அப்பகுதியை உல்லாசப் பயணிகளுக்கானதாக பிரகடனப்படுத்திவிட்டு அந்தப்பகுதியின் நிர்வாகத்தை ஒன்றில் உல்லாசத்துறை அல்லது தொல்பொருள் திணைக்களம் தங்களுடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரலாம்.

கன்னியா தொடர்பில் பல கண்டன அறிக்கைகள் வெளிவந்திருக்கின்றன. அரசியல்வாதிகள் பாராளுமன்றத்திலும் பேசியிருக்கின்றனர். கூடவே, இந்து அமைப்புகள் என்போரின் கண்டன அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. வடக்கிலிருந்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள் அடங்கலாக ஒரு முறை பேரணியும் நடத்தியிருந்தனர். தற்போது, திருகோணமலை தமிழ் மக்களுக்கு பாராளுமன்ற உறுப்பினரும் இல்லாத நிலையில் யாரால் இது தொடர்பில் பேச முடியும்?

# ஏப்ரல் 25ஆம் திகதியும் தேர்தல் நடைபெறாது!

## பவ்ரல் அமைப்பு கூறுகிறது

கொழும்பு, மார்ச் 16

தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு ஏப்ரல் 25ஆம் திகதி உள்ளூராட்சி சபை தேர்தல் நடத்தப்படுவது சாத்தியமில்லை என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

"அரசாங்கம் மக்களின் வாக்குரிமையை பறிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை. நீதிமன்ற தீர்ப்புகளைக்கூட அலட்சியம் செய்யும் நிலைக்கு அரசு வந்துவிட்டது. ஜனநாயகத்தின் மூன்று தூண்களான சட்டமன்றம், நிறைவேற்றுத் துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றின் சமநிலை இப்போது முற்றிலும் சீர்குலைந்துள்ளது." என கூறினார்.

முன்னதாக உள்ளூராட்சித் தேர்தலை தாமதப்படுத்த அரச அதிகாரிகள் சதி செய்து வருவதாகவும் பாராளுமன்ற சிறப்புரிமைகளுக்குப் பின்னால் மறைந்திருந்து நீதிமன்றத் தீர்ப்பை சவால் செய்வதன் மூலம் தேர்தலை தாமதப்படுத்த பாராளுமன்றமும் இப்போது செயல்படுவதாகவும் ஹெட்டியாராச்சி கூறினார். (ஐ)

# 24 முதல் ஆசிரியர்களுக்கான தற்காலிக இடமாற்றம் இரத்து

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

தொற்றுநோய் மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு 2022ஆம் ஆண்டில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக இடமாற்றங்கள் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு பின்னர் நீடிக்கப்படாது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டு நெருக்கடியான காலகட்டத்தில், பயணம் மற்றும் போக்குவரத்தில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு, ஆசிரியர்களுக்கு நிபந்தனை நிவாரணம் வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்தது. ஆசிரியர்கள் அவர்கள் வசிக்கும் இடத்துக்கு அருகில் உள்ள பாடசாலைகளுக்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டனர்.

எவ்வாறாயினும், இந்த இடமாற்ற நியமனங்கள் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு அப்பால் நீடிக்கப்பட மாட்டாது என அமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பான விரிவான அறிவிப்பு சம்பந்தப்பட்ட மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்படும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# மது விற்பனை சடுதியாக சரிவு; வரியை குறைக்கக் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 16

மது விற்பனையில் வேகமான சரிவு ஏற்பட்டுள்ளதால், 13 மதுபான உற்பத்தி நிறுவனங்கள் கலால் துறை மற்றும் நிதி அமைச்சகத்துக்கு அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில் கலால் வரியை குறைக்க ஆவன செய்யுமாறு நிதி அமைச்சிடம் கலால் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது .

அக்கடிதத்தில் கலால் வரியை 2000 ரூபாயால் குறைக்குமாறு கோரப்பட்டுள்ளது. தற்போது மது, பியர் ஆகியவற்றுக்கு 4,500 முதல் 5,500 ரூபாய் வரை கலால் வரி விதிக்கப்படுகிறது.


தற்போது, மது விற்பனை 40 சதவீதம் குறைந்துள்ளது. மேலும் சில மது உற்பத்தி தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன என்று கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுபானத்தின் விலை அதிகரிப்பு மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு காரணமாக மது விற்பனை பெருமளவில் குறைந்துள்ளதாக நிறுவனங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

இதுகுறித்து கலால் திணைக்கள கூடுதல் கலால் ஆணையர் கபில குமாரசிங்க கூறுகையில்,

மதுபான உற்பத்தியாளர்கள் போன்று கலால் திணைக்களமும் கலால் வரியை குறைக்க கோரியுள்ளது. மதுபானத்தின் விலை உயர்வால் பலர் சட்ட விரோத மதுவை நாடியுள் ளனர். இந்த நிலையைக் கட்டுப்படுத்தும் வகையில் மதுவரியை இயன்ற வரை குறைக்க வேண்டும் - என்றார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 16 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - பங்குனி 02
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : தசமி




**மேடம்**
நேற்றுவரை இருந்த சங்கடம் விலகும். உங்கள் விருப்பம் நிறைவேறும். புதிய முயற்சி வேண்டாம். நிலைமையைப் புரிந்து கொண்டு செயல்படுவீர். உங்கள் முயற்சி ஒன்று வெற்றி பெறும்.

**இடபம்**
உங்கள் மனநிலையில் பதட்டம் உண்டாகும். விழிப்புடன் இருப்பதால் நன்மை அதிகரிக்கும். எதிர்பார்ப்பு தள்ளிப் போகும். செயல்களில் பின்னடைவு ஏற்படும். புதிய முயற்சி வேண்டாம்.

**மிதுனம்**
நண்பர்கள் உதவியுடன் நீங்கள் நினைத்தது நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். தம்பதிகளுக்குள் ஏற்பட்ட சலசலப்பு நீங்கும். குடும்பத்தில் மங்கள நிகழ்ச்சிக்கு அறிகுறி தோன்றும். நிதி உயரும்.

**கடகம்**
முயற்சி ஒன்றில் போராடி வெற்றி பெறுவீர். உங்கள் திறமை வெளிப்படும் நாள். பழைய பிரச்னை ஒன்றில் முடிவு காண்பீர்கள். மறைமுக எதிரி விலகிச் செல்வார்கள். செயல்களில் வெற்றி காண்பீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். பெற்றோர் ஆதரவால் எதிர்பார்ப்பு நிறைவேறும். உங்களைச் சுற்றி இருப்பவர்களில் நல்லவர், பகைவர் யார் என்பதைத் தெரிந்து கொள்வீர்.

**கன்னி**
தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். அரசு வழியில் அனுகூலம் உண்டு. நீங்கள் எதிர்பார்த்த பணம் வரும். கடன்களை அடைத்து நிம்மதி அடைவீர்கள். உங்கள் முயற்சி லாபம் தரும்.

**துலாம்**
உங்கள் முயற்சியில் இருந்த தடை விலகும். துணிச்சலுடன் செயல்பட்டுவீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்னைகளை நண்பர்கள் ஆதரவுடன் சரி செய்வீர்கள். எதிர்பாராத பிரச்னையை சந்திப்பீர்கள்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவி வரும். நண்பர்களால் நேற்றைய பிரச்னை சரியாகும். தம்பதிகளுக்குள் ஏற்பட்ட பிரச்னை விலகும். இழுபறியான செயல் ஒன்று நிறைவேறும்.

**தனுசு**
மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகும். முயற்சியில் தடுமாற்றம் ஏற்படும். தொழிலில் வெற்றி பெறுவீர்கள். செயல் களில் கவனம் தேவை. குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும்.

**மகரம்**
மறைமுக எதிர்ப்பு தோன்றினாலும் அவற்றை சமாளித்து நினைத்ததை சாதிப்பீர்கள். குடும்பத்தில் நன்மை உண்டாகும். வாகன அலைச்சல் உண்டாகும். வியாபாரத்தில் கவனம் தேவை.

**கும்பம்**
திட்டமிட்ட வேலைகளை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிர்பாராத வரவு வரும். வியாபாரத்தில் உங்கள் முயற்சி வெற்றியாகும். பழைய கடன்களை அடைப்பீர்கள். நிதிநிலை உயரும்.

**மீனம்**
சுறு சுறுப்பாக செயல்பட்டு கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். காணாமல் போன பொருள் கிடைக்கும். புதிய நம்பிக்கை உண்டாகும். உங்கள் முயற்சி வெற்றியாகும். திறமை வெளிப்படும்.

# ஒஸ்கார் விருதின் எதிரொலி; முதல்வர் புதிய அறிவிப்புகள்

சென்னை, மார்ச் 16

'தி எலிபண்ட் விஸ்பரர்ஸ்' என்ற ஆவணப் படத்தின் மூலம் தமிழ்நாடு வனத்துறையின் செயல்பாடு மற்றும் யானைகள் பராமரிப்பு முறை உலகளவில் கவனம் பெற்றுள்ளதால் அதனை மேலும் ஊக்கப்படுத்திடும் வகையில் தமிழ்நாடு யானைகள் முகாமில் பணியாற்றி வரும் ஊழியர்கள் அனைவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

95ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. வண்ணமயமான அரங்கத்தில் நடைபெற்ற இந்த விழாவில் 'தி எலிபண்ட் விஸ்பரர்ஸ்' என்ற ஆவணப்படம் சிறந்த படமாக தெரிவு செய்யப்பட்டது. அப்படத்தின் இயக்குநர் கார்த்திகி கொன்சால்வ்ஸ் மற்றும் தயாரிப்பாளர் குனீத் மோங்கா ஆகியோர் ஒஸ்கார் விருதைப் பெற்றனர். 'தி எலிபண்ட் விஸ்பரர்ஸ்' திரைப் படம் ஒஸ்கார் விருது வென்றதை இந்தியா முழுவதும் உள்ள சினிமா ரசிகர்கள் மட்டுமின்றி அணைத்து தரப்பினரும் கொண்டாடி மகிழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலினும் ஒஸ்கார் விருது வென்ற 'தி எலிபண்ட் விஸ்பரர்ஸ்' ஆவணப்படத்தில் நடித்த பொம்மன் பெள்ளி தம்பதியனரை நேற்று சென்னை தலைமைச் செயலகத்துக்கு நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து இவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பாராட்டு பத்திரமும் பொன்னாடையும் அணிவித்து தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

இதனை தொடர்ந்து இதி எலிபண்ட் விஸ்பரர்ஸ்' என்ற ஆவணப் படத்தின் மூலம் தமிழ்நாடு வனத்துறையின் செயல்பாடு மற்றும் யானைகள் பராமரிப்பு முறை உலகளவில் கவனம் பெற்றுள்ளது என்பதால் அதனை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள இரண்டு யானைகள் முகாம்களான முதுமலையில் உள்ள தெப்பக்காடு மற்றும் ஆனைமலையில் உள்ள கோழிக முத்தி யானை முகாமில் பணியாற்றி வரும் மொத்தம் உள்ள 91 பணியாளர்களுக்கும் இந்த மகிழ்ச்சியான தருணத்தில் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என முதலமைச்சர் அறிவித்துள்ளார். மேலும் யானை பராமரிப்பாளர்களாகிய இவர்கள் வசிக்கத் தேவையான சுற்றுச்சூழலுக்கு இசைந்த அவர்கள் பண்பாட்டிற்கு உகந்த வீடுகள் கட்ட ரூபாய் 9.10 கோடி நிதி உதவியை அரசு வழங்கும் எனவும் அறிவித்துள்ளார். (ஐ)

# முதல்வரின் திட்டத்தால் மாணவர் வருகை உயர்வு

சென்னை, மார்ச் 15

தமிழ்நாட்டு முழுவதும் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு காலை சத்துணவு வழங்கும் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் ஆரம்பித்து வைத்தார். இதன் மூலம் பாடசாலைக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூலை எடுக்கப்பட்ட திட்டக்குழு பகுப்பாய்வின்படி தமிழகத்தில் 217 பாடசாலைகளில் வருகை முறையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும், முதலமைச்சரின் இந்த திட்டத்தால் அனைத்து மாவட்டங்களிலுமே மாணவர்கள் வருகை அதிகரித்து வருகிறது.

சில பாடசாலைகளில் இந்தத் திட்டம் காரணமாக மாணவர்களின் வருகை நூறுவீதமாக வளர்ச்சி கண்டுள்ளது. (ஐ)

# அ. தி. மு. க. வழக்கு; நாளைவிசாரணை

சென்னை, மார்ச் 16

கடந்த ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி இடைக்கால பொதுச்செயலாளராக தெரிவு செய்யப்பட்ட நிலையில் ஓ. பன்னீர் செல்வம் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதை எதிர்த்து பழனிசாமி தரப்பினர் உச்நீதி மன்றில் தொடர்ந்த வழக்கு விசாரணையில் மாறுபட்ட தீர்ப்புகள் கூறப்பட்டன. ஓ. பன்னீர்செல்வத்துக்கு ஆதரவாக முதலில் தீர்ப்பளித்த நிலையில் 2ஆவதாக வந்த தீர்ப்பு எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு ஆதரவாக அமைந்திருந்தது. இதை எதிர்த்து பழனிசாமி உச்சநீதிமன்றில் முறையிட்டார். இந்த வழக்கு விசாரணை முடிந்து கடந்த மாதம் 29ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது.

அ.தி.மு.க. பொதுக்குழு செல்லும் என்று கூறிய உச்ச நீதிமன்றம் தீர்மானங்களில் தலையிடவில்லை என்றும், சிவில் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றமே இதுபற்றி முடி வெடுக்கும் என்றும் தெரிவித்து இருந்தது.

இதையடுத்து பழனிசாமி தரப்பு சென்னை உயர் நீதிமன்றில் உரிமையியல் வழக்கு தொடர்ந்தது.

பொதுக்குழு முடிவுகள் அ.தி.மு.க. நிறுவனரான எம்.ஜி.ஆரின் கொள்கைகளுக்கு எதிரானது என்றும், எனவே கட்சி விதிகளுக்கு மாறாக தங்களை நீக்கிய தீர்மானங்களை இரத்து செய்ய வேண்டும் என்றும் எதிர்தரப்பினரின் கருத்தை கேட்காமலேயே இதனை செய்ய வேண்டும் என்றும் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையில் இந்த வழக்கு நாளை விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

# சீர்காழி மாணவிக்கு பிரதமர் மோடி வாழ்த்து

சென்னை, மார்ச் 16

சீர்காழியை சேர்ந்த யோகா மாணவி சுபானுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார்.

கடந்த ஆண்டு காசியில் நடைபெற்ற தமிழ் சங்கத்தில் மாணவி சுபானு அவர் தாய் சீதாவுடன் பங்கேற்று யோகாவில் சிவதாண்டவம் ஆடி அனைவரின் பாராட்டைப் பெற்றார். இந்நிலையில், மாணவி சுபானுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமிழில் வாழ்த்து செய்தியை அனுப்பி உள்ளார்.

அதில், "காசி தமிழ் சங்கமத்தில் நீங்கள் ஆர்வத்தோடு பங்கேற்றது குறித்த உங்களது கடிதம் உண்மையிலேயே மகிழ்ச்சி அளிக்கிறது. வரலாற்றுச் சிறப்பு மிக்க காசியில் தமிழர்களின் வளமையான கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் கொண்டாட்டத்தைக் காணும் இனிமையான அனுபவம் கங்கை, காவேரி போன்ற புனித நதிகளில் நீராடுவதைப் போன்றது.

'ஏக் பாரத் ஷ்ரேஷ்ட பாரத்' அதாவது 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்பது ஒரு சொற்றொடர் மட்டுமல்ல் பன்முகத் தன்மையைக் கொண்டாடும் இந்தியா போன்ற நாட்டிற்கு தனித்துவமான ஒரு வாழ்க்கை முறையாகும். சங்க இலக்கியத்தின் தொன்மையான காலகட்டத்தில் இருந்து நவீன கால காசி தமிழ் சங்கமம் வரை, அத்தகைய உடைக்க முடியாத ஒற்றுமை இழைகளால் நாம் பிணைக்கப் பட்டுள்ளோம்.

காசியும், தமிழகமும் பூகோள ரீதியாக ஒன்றுக்கொன்று தொலைவில் இருக்கலாம். ஆனால் அவை கலாசார மற்றும் ஆன்மீக ரீதியாக உறுதியாக, ஒற்றுமையாகப் பிணைந்துள்ளன.

பல்வேறு பகுதிகள் மற்றும் மாநிலங்களைச் சேர்ந்த மக்களின் மனதில் உள்ள ஆழமான உணர்வுகளை வெளிக்கொண்டு வந்து நமது தாய் நாட்டை மெய்யாகவே தனித்துவப்படுத்தும். உங்களின் வாழ்த்து செய்தி காசி தமிழ் சங்கமத்தின் மீதான உங்கள் அன்பையும், பாசத்தையும் பிரதிபலிக்கும் விதமாக அமைந்துள்ளன.

உங்களின் இந்த அன்பு, தேசத்தின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் மேலும் வலுப்படுத்த, அயராது பாடு பட என்னுள் புதிய ஆற்றலையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்திலும் நேற்று அரச சேவைகள் முடங்கின!

## தொழிற்சங்கப் போராட்டம் காரணமாக

யாழ்ப்பாணம், மார்ச் 16

**முறையற்ற வரிக்கொள்கையை நீக்குதல், அதிகரித்த வாழ்க்கைச் செலவை குறைத்தல், மின், நீர் கட்டணங்களை குறைப்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க போராட்டத்தினால் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு சேவைகளும் முடங்கின.**

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளின் கல்வி நடவடிக்கை முற்றாக முடங்கியது.

ஆசிரியர்களின் பகிஷ்கரிப்பு காரணமாக பாடசாலைக்கு வந்த மாணவர்களும் மீண்டும் வீடுகளுக்கு திரும்பி சென்றனர்.

வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பால் யாழ்.போதனா வைத்தியசாலையின் நடவடிக்கை பாதிக்கப்பட்டது. மாவட்டத்தில் உள்ள ஏனைய அனைத்து அரச வைத்திய சாலைகளிலும் இதே நிலைமை தான் நிலவியது.

மாவட்டத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சை தவிர்ந்த ஏனைய சேவைகள் பாதிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் நேற்று போக்குவரத்து சேவைகள் வழமை போன்று இடம்பெற்றன.



யாழ்ப்பாணம் பிரதான அஞ்சல் அலுவலகம் உட்பட அனைத்துஅலுவலகங்களும் மூடப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (அ)

# சுதந்திர சதுக்க வளாகத்துக்குள் உள்ளூர்வாசிகள் செல்லத் தடை!

கொழும்பு, மார்ச் 16

கொழும்பு 7 இல் அமைந்துள்ள சுதந்திர சதுக்க வளாகத்துக்குள், உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள், சுதந்திர சதுக்க வளாகத்துக்குள் பிரவேசிக்க வேண்டுமாயின் பொது நிர்வாக அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மாத்திரம் உள்ளே செல்ல முடியும் என்று பொலிஸார் தெரிவித்ததுடன், அந்தப் பகுதியில் அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டனர். (அ)

# புதையல் தோண்டிய எழுவர் கைதாகினர்

கொழும்பு, மார்ச் 16

குருநாகல் நாகொல்லாகம பிரதேசத்தில், புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த எழுவரை புலனாய்வு பிரிவினர் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்து செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாவல, பொரளை, வதுரம்ப, வாதுவ ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 24 மற்றும் 41 வயதுகளையுடைய எழுவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போதே குறித்த எழுவரும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் மஹவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இது தொடர்பில், மஹவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ரயிலுக்குள் கைவிடப்பட குழந்தை தாய், தந்தைக்கு மீள விளக்கமறியல்

கொழும்பு, மார்ச் 16

மீனகயா ரயிலின் கழிப்பறையில் குழந்தையொன்று கைவிடப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட் அக் குழந்தையின் தாய் மற்றும் தந்தை ஆகியோர் எதிர்வரும் 17 வரை மீள விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, நீதிவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித்தார்.

கடந்த 11 ஆம் திகதி, கொழும்பு கோட்டையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி புறப்படவிருந்த மீனகயா ரயிலின் கழிப்பறையில் கைவிடப்பட்டிருந்த குழந்தையொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் மேற்கொண்ட விசாரணைகளில் குழந்தையின் தாய் மற்றும் தந்தை ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட குழந்தையின் தாய் பண்டாரவளை பகுதியை சேர்ந்த 25 வயது டைய ஒருவரெனவும், தந்தை கொஸ்லந்தை பிரதேசத்தை வசிப்பிடமாக கொண்டவரெனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், அவர்கள் சட்ட ரீதியாக திருமணம் செய்து கொள்ளாதவர்கள் என்றும் மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் கடந்த 13 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், நீதிவானின் உத்தரவுக்கமைய, நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (அ)

# பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு, மார்ச் 16

கொழும்பு, பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுவாரபொல பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து, பெண்ணொருவரின் சடலத்தை பிலியந்தலை பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த 27 வயது யுவதியின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் கணவருடன் ஏற்பட்ட முறுகலையடுத்து தனது தாயின் வீட்டுக்கு வருகை தந்திருந்ததாகவும் இந்நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், பிலியந்தலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-கே)

# காட்டு யானையின் தாக்குதலில் ஒருவர் பலி!

கொழும்பு, மார்ச் 16

மொனராகலை ஒக்கம்பிட்டிய பிரதேசத்தில், காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புருத்துகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயது நபரே இவ்வாறு காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

தனது விவசாய காணிக்கு இரவு வேளையில் சென்றபோதே குறித்த நபர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். பிரேத பரிசோதனைக்காக மொனராகலை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஒக்கம்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# போலி காப்புறுதி முகவர்கள் உடன் விசாரணை வேண்டும்

கொழும்பு, மார்ச் 16

2009 ஆம் ஆண்டு போலிக் காப்புறுதி முகவர்கள் குறித்து குற்றப்புலனாய்வுத்துறையினரிடம் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இதனையடுத்து அதன் தற்போதைய நிலை என்னவென்பதை விசாரிக்குமாறு பொது நிறுவனங்களுக்கான கோப் குழு இலங்கை காப்புறுதி நிறுவனத்திடம் கோரியுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணையின் முன்னேற்றம் குறித்து குற்றப்புலனாய்வுத் துறையிடம் கேட்குமாறு கோப் தலைவர் ரஞ்சித் பண்டார இலங்கை காப்புறுதி நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக கடந்த 2009ம் ஆண்டு குற்றப்புலனாய்வுத்துறையில் முறைப்பாடு அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் மாலைதீவு மற்றும் சீஷெல்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கீழ் பெரும் நிதி இழப்பைச் சந்தித்த இரண்டு கிளைகள் மூடப்பட முடிவெடுக்கப்பட்டபோதும் இன்னும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

எனவே அது குறித்து கண்காணிப்பை மேற்கொள்ள கோப் குழு தீர்மானித்துள்ளது. (அ)

# இலங்கை துறைமுக அதிகார சபையினுள் பதற்ற நிலைமை

கொழும்பு, மார்ச் 16

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வரிக் கொள்கை மற்றும் மின்கட்டண அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்னிறுத்தி பல்வேறு தொழிற்சங்கங்கள் பணி பகிஷ்கரிப்பு முன்னெடுத்தன.

நேற்று முன்னெடுத்த பணி பகிஷ்கரிப்பில் இலங்கை துறைமுக அதிகார சபை உறுப்பினர்களும் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், இலங்கை துறைமுக அதிகார சபை தலைவருக்கும் தொழிற்சங்க உறுப்பினர்களுக்கும் இடையே அமைதியின்மை ஏற்பட்டதுடன், அங்கு பதற்ற நிலை உருவாகியது. பின்னர் அது கட்டுப்பாட்டுக்குள் வந்தது. (அ)

# ஹரக் கட்டா, குடு சலிந்து விமானத்தில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்!

கொழும்பு, மார்ச் 16

நாட்டின் முன்னணி போதைப் பொருள் கடத்தல் காரர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளான ஹரக் கட்டா என அழைக்கப்படும் நடுன் சிந் தக மற்றும் குடு சலிந்து என்ற சலிந்து மல்ஷித ஆகியோர் இலங்கை அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள், மடகாஸ்கரில் நாட் டின் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இருவரும் நேற்றுக் காலை 7.20 மணியளவில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டதாக விமான நிலையப் பேச்சாளர் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தின்



ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் விசேட குழுவொன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவர்களைப் பெற்றுள்ளது. (அ)

# யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்கு பாதிப்பு இல்லை!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், மார்ச் 16

தொழிற்சங்க பணிப்பகிஷ்கரிப்பில் வைத்தியர்கள் ஈடுபட்டாலும் அவசர சிகிச்சைப் பிரிவு தொடர்ந்தும் இயங்குமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். போதனா வைத்தியசாலை கிளையின் தலைவர் எஸ்.மதிவாணண் தெரிவித்தார்.

அதேநேரத்தில்தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற வைத்தியர்கள் தனியார் வைத்தியசாலைகளிலும் சேவையில் ஈடுபட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தொழிற் சங்க நடவடிக்கை தொடர்பில் யாழ் போதனாவில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல தரப்பினர்களும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரும் சில கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக அரசின் நியாய மற்ற வரிக்கொள்கை, சம்பள குறைப்பு, மருந்து தட்டுப்பாடு உள்ளிட்ட பிரச்னைகளுக்கு அரசாங்கம் உடனடியாகத் தீர்வை வழங்கவேண்டுமென வலியுறுத்தி கடந்த போராட்டங்களை முன்னெடுத்திருந்தோம்.

எனினும் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்காததால் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம்.

இந்த தொழிற்சங்க நடவடிக்கையினால் பொது மக்கள் பாதிக்கப்படாத வகையில் அவசர சிகிச்சைப் பிரிவுகள் தொடர்ந்தும் இயங்கி வருகின்றன.

ஆனாலும் ஏனைய சேவைகளில் மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு எமது மன வருத்தத்தை தெரிவித்து கொள்கிறோம். மேலும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவது எமது நோக்கமும் அல்ல.

அதனால் முடிந்தவரை சேவையை வழங்க தயாராக இருக்கிறோம்.

இதற்காகவே சில சில இடங்களில் நாளாந்த ரீதியாக இந்த தொழிற்சங்க நடவடிக்கையை முதலில் ஆரம்பித்திருந்தோம்.

இவ்வாறான நிலைமையில் நாளையதினம் நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கவுள்ள தொழிற்சங்க நடவடிக்கையில் நாமும் இணைந்து கொள்கிறோம்.

எமது இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் அவசர சிகிச்சைகள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுகள் இயங்கும் என்பதை மக்களுக்கு மீளவும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேநேரம் மக்களுக் ஏற்படும் சிரமத்திற்கு எமது மன வருத்தத்தை தெரிவித்துக்கொள்வதுடன் எமது மக்கள் தொடர்ச்சியாக பாதிப்படைய விடமாட்டோம் என்பதையும் கூறிக் கொள்கிறோம்.

ஆகையினால் நாம் முன் வைத்துள்ள கோரிக்கைகளிற்கு அரசாங்கம் விரைவாக சமூகமான தீர்வை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறான தீர்வை வழங்கும் எனவும் எதிர்பார்க்கிறோம்.

இதேவேளை அரச வைத்தியசாலைகளில் தொழிற்சங்க போராட்டத்தில் வைத்தியர்கள் ஈடுபடுகின்ற போது தனியார் வைத்தியசாலைகளில் சேவையில் ஈடுபட முடியாது.

ஆனால் அரச வைத்தியசாலையில் அவசர சிகிச்சை வழங்குவது போன்று தனியார் வைத்தியசாலையிலும் அவசர சிகிச்சையை மட்டுமே வழங்க முடியும். மாறாக சாதாரண சேவைகளில் ஈடுபட முடியாது- என்றார். (அ)

# யோஷிதவின் தேர்தல் பயணத்தை தடுத்து நிறுத்தினார் கோட்டாபய!



கொழும்பு, மார்ச் 16

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது புதல்வர் யோஷித ராஜபக்ஷ பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட தயாராக இருந்த போதிலும், முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் விடுத்த கோரிக்கையால் அது நடக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சுதந்திர மக்கள் முன்னணியின் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

“பதுளையில் டிலான் ஒரு நொடிப்பொழுதில் தப்பித்தார். யோஷிதவையும் பதுளையில் களமிறக்கத் திட்டமிட்டார்கள். அந்நாட்களில் மகியங்கனையில் தேனுகவும் குழப்பத்தில் இருந்தார்.

யோஷிதவை களமிறக்கவுள்ளோம் என டலஸ் கோட்டாபயவிடம் கூறியபோது அந்த முட்டாள் வேலையை செய்து விடாதீர்கள் என கோட்டாபய கூறியிருந்தார்.

அப்படி செய்தால் ஆடை அணிந்து வீதியில் செல்ல முடியாமல் போய்விடும் என கோட்டாபய குறிப்பிட்டார்.

எப்படியோ தீவிர முயற்சிகளை மேற்கொண்டு கோட்டாபய அதனை தடுத்து நிறுத்தி விட்டார்” என விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்துள்ளார்.(அ)

# கடன் மறுசீரமைப்பு விதிமுறைகளில் வெளிப்படைத்தன்மை உறுதியாகும்!

## கூறுகிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, மார்ச் 16

எந்தவொரு கடன் வழங்குநர்களிடம் ஒப்புக்கொள்ளப்பட்ட கடன் மறுசீரமைப்பு விதிமுறைகளில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

இலங்கையின் உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எழுதியுள்ள பகிரங்க கடிதத்தில் இந்த உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதிய உதவித் திட்டத்திற்கு இணங்க கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை கடன் வழங்குநர் ஒப்புக்கொள்ளும் வரை, எந்தவொரு கடன் வழங்குநருக்கும், கடன் சேவையை மீண்டும் தொடங்கப்படமாட்டாது.

அனைத்து வெளித்தரப்பு கடன் வழங்குநர்களுக்கும் ஒப்பிடக்கூடிய மறுசீரமைப்புக்கு இலங்கையின் உறுதிப்பாட்டை ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

(அ)

# இலங்கையர்களின் டிஜிட்டல் அறிவை மேம்படுத்த திட்டம்




கொழும்பு, மார்ச் 16

தற்போதைய தொழில்நுட்ப உலகில் டிஜிட்டல் மத்திய நிலையம் என்பது மாணவர்களுக்கு புதிய அறிவை தேடுவதற்குத் தேவையான ஒரு வளமாகும் என்று பிரதமர் தினேஷ் குணவர் தன தெரிவித்தார்.

பீ.எம்.எஸ் பல்கலைக்கழகத்தின் புதிய டிஜிட்டல் தொழில்நுட்ப மத்திய நிலையத்தை திறந்து வைத்துப் பேசும்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

செல்வந்த மற்றும் வறிய நாடுகளுக்கு இடையில் வருமானத்தில் இடைவெளி இருப்பதைப் போல டிஜிட்டல் துறையிலும் இடைவெளி காணப் படுகிறது.

இலங்கையர்களின் டிஜிட்டல் அறிவை விருத்தி செய்வதன் மூலம் இந்த இடைவெளியை நிரப்ப முடியும். இதற்காக

அரசாங்கம் பல வினைத்திறனான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

இந்த செயற்பாட்டில் தனியார் துறையின் ஒத்துழைப்பும்

அவசியம் என பிரதமர் சுட்டிக்காட்டினார்.

(அ)

# இருட்டறைக்குள் கட்டி வைத்து 10 மாணவர்கள் மீது தாக்குதல்!

## அதிபர், 3 ஆசிரியர்கள் உட்பட 6 பேர் கைது

கொழும்பு, மார்ச் 16

கண்டி- பொக்காவல பிரதேசத்தில் உள்ள தனியார் பாடசாலை ஒன்றில் 10 மாணவர்கள் இருட்டறைக்குள் கட்டி வைத்து தாக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு ஆசிரியர்கள் மற்றும் இரண்டு விடுதிக் காப்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலை விடுதிக்குள் 10 மாணவர்களை (ஐந்து ஆண்கள் மற்றும் ஐந்து பெண்கள்) கடுமையாக தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தினால் கைது செய்யப்பட்ட குறித்த குழுவினர் கண்டி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது , மார்ச் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தயாராக விடுதிகளில் தங்கியிருந்த 10 மாணவர்கள் மீதே இவ்வாறு கொடூரமாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பாடசாலை விடுதியில் தங்கியுள்ள ஐந்து மாணவர்கள் அன்றைய தினம் இரவு மாணவிகள் தங்கியிருந்த விடுதிக்குள் சென்றுள்ளனர்.

விடுதியில் மேலும் மூன்று மாணவர்கள் வந்துள்ளதுடன் இரவு 11.30 மணியளவில் பெண்கள் விடுதிக்குப் பொறுப்பான ஆசிரியையும் அங்கு வந்துள்ளார்.

அங்கு மாணவர்களைக் கண்ட அவர், உடனடியாகவே அதிபருக்கு அறிவித்துள்ளார்.

அதேவேளை மாணவர்களின் விடுதிக்கு பொறுப்பான ஆசிரியரும் மேலும் ஒரு ஆசிரியையும் ஐந்து மாணவர்களையும் கீழே தள்ளி கடுமையான தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

அதனையடுத்து அவர்கள் அணிந்திருந்த மேற்சட்டைகளை கழற்றி கைகளைக் கட்டி மாணவிகளின் விடுதிக்கு முன்பாக முழுங்காலிடச் செய்துள்ளனர்.

மாணவிகள் ஐந்து பேரை விடுதிக்கு முன்பாக கொண்டுச்சென்று அவர்கள் மீதும் தாக்குதல் நடத்தி அவர்களின் முடிகளை கட்டி அவர்களையும் முழங்காலிடச் செய்துள்ளனர்.

அதனையடுத்து அவர்களை இருட்டறையொன்றுக்குள் சிறைப்படுத்தியுள்ளனர்.

அதில் ஒரு மாணவர் கட்டுக்களை அவிழ்த்துக்கொண்டு தற்கொலை செய்துகொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்ட நிலையில், அவர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தநிலையிலே மேற்படி தனியார் பாடசாலையின் அதிபர், இரு ஆசிரியைகள், ஆசிரியரொருவரும் மற்றும் விடுதி கண்காணிப்பாளர்கள் இருவரும் கண்டி சிறுவர் மற்றும் பெண்கள் பணியக அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டனர். (அ)



## சுற்றுலாப் பயணிகள் அவதி

கொழும்பு, மார்ச் 16

நேற்று நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட வேலைநிறுத்தத்தினால் சுற்றுலாப் பயணிகளும் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சிலர் நேற்று நுவரெலியாவுக்கு சென்றனர்.

பிரான்ஸ் மற்றும் ரஷ்யாவில் இருந்து வருகைதந்த சுற்றுலாப் பயணிகளுடன் அவர்களை வழிநடத்தும் இலங்கையைச் சேர்ந்த வழிகாட்டிகள் சிலரும் இருந்தனர்.

பஸ்களில் நுவரெலியாவுக்கு சென்ற அவர்கள், நுவரெலியாவில் பழைய தபால் காரியாலயத்தை பார்வையிட்டதன் பின்னர், நானுஓயாவில் இருந்து எல்லைக்கு ரயிலில் செல்வதற்கு திட்டமிட்டிருந்தனர்.

எனினும், தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தால், தாங்கள் திட்டமிட்டிருந்ததன் பிரகாரம், சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்ள முடியவில்லை என அவர்கள் மனம் நொந்துகொண்டனர் என்று வழிகாட்டிகள் தெரிவித்தனர். (அ)

# உள்ளூர் கடற்பரப்பில் வெளிநாட்டவர் மீன் பிடிப்பதை அனுமதிக்க முடியாது!

### மாவை சேனாதிராசா கூறுகிறார்



யாழ்ப்பாணம், மார்ச் 16

**வெளிநாட்டு மீனவர்கள் எந்த எல்லையில் மீன் பிடிக்கலாம் என்பது சரியான முறையில் அடையாளப்படுத்தப்பட வேண்டும். மேலும், உள்ளூர் கடலில் வெளிநாட்டவர்களை மீன்பிடிக்க அனுமதிக்க முடியாது என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.**

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன்பிடிப்பது தொடர்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை, இந்திய மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கென கடற்பரப்பில் ஓர் எல்லை உண்டு. அந்த எல்லைக்குள் நின்று யாரும் மீன்பிடி தொழிலை செய்ய முடியும்.

அதை விடுத்து, எல்லை மீறி வந்து தடை செய்யப்பட்டுள்ள மீன்பிடி முறையில் தொழில் செய்வது என்பது இரு நாட்டு மீனவர்களையும் மோத விடுகின்ற செயற்பாடாகவே அமையும்.

ஒரு நாட்டின் மீனவர்களை இன்னொரு நாட்டின் எல்லைக்குள் தொழில் செய்ய அனுமதிப்பதாயின், மீனவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து, கலந்தாலோசித்து, ஆராய்ந்து, அதன் பின்னரே இது தொடர்பில் முடிவெடுக்க வேண்டும்.

இவ்வாறு எவ்வித கலந்துரையாடலையும் நடத்தாமல், எமது மீனவர்களது கடற்பரப்பு எல்லைக்குள் பிரவேசித்து, தொழில் செய்ய யாராக இருந்தாலும் அனுமதிக்க முடியாது.

குறிப்பாக, தமிழர்களின் கடற்பகுதிகளில் தொழிலில் ஈடுபட அனுமதிக்க முடியாது.

இவ்விடயம் தொடர்பில் இலங்கை, இந்திய அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவோம். ஏற்கனவே எமது மீனவர்கள் யுத்தம், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் அவர்களை பாதிக்கக்கூடிய ஒரு விடயத்தை நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை-என்றார். (அ)

### வெலிக்கடை சிறை படுகொலை:

# எமில் ரஞ்சனின் மேன்முறையீட்டை விசாரிப்பதற்கு திகதி நிர்ணயிப்பு

கொழும்பு, மார்ச் 16

2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகளை சுட்டுக்கொலை செய்த வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் எமில் ரஞ்சன் கல்கஹேவ தன்னை விடுதலை செய்யக் கோரி தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணைக்கு உயர் நீதிமன்றம் திகதி நிர்ணயித்துள்ளது.

விஜித் மலல்கொட, எஸ். துரைராஜா, ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலி மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாமினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மேன்முறையீட்டு மனுவை நவம்பர் 06, 07, 08, 13, 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விசாரணை நடைபெறும் நாட்களில் குற்றவாளிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மனுதாரரின் எழுத்துமூலவுரைகளை செப்டம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதுடன், சட்டமா அதிபரின் எழுத்து மூலமான உரைகளை ஒக்ரோபர் 13 ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலைக்குள் இடம்பெற்ற மோதலின் போது 8 கைதிகளின் மரணத்திற்கு காரணமான குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் எமில் ரஞ்சனுக்கு 2022 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் மரண தண்டனை விதித்தது.

அந்த தண்டனையில் இருந்து தன்னை விடுவிக்குமாறு கோரி பிரதிவாதி எமில் ரஞ்சன் கல்கஹேவ உயர் நீதிமன்றத்தில் இந்த மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளார். (அ)



# கிளிநொச்சியில் தொடரும் யானைகளின் அட்டகாசம்!

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் தொடரும் காட்டு யானை தாக்குதலால் பெரும் அழிவுகளை எதிர்கொள்வதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளை-புளியம் பொக்கனை மற்றும் வண்ணத்தியாறு பகுதியில் தோட்டச் செய்கை மற்றும் தென்னை செய்கை என்பவற்றைக் காட்டு யானைகள் அழித்துள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தோட்ட பயிர்ச் செய்கை மற்றும் தென்னைச் செய்கை என்பவற்றை முற்று முழுதாக அழித்து வரும் யானைகளில் இருந்து எம்மையும் எமது வாழ்வாதாரத்தையும் காப்பாற்றுவதற்கு எவரும் முன்வரவில்லை எனவும் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தெரிவித்தபோதிலும் எந்த பயனுமற்றுபோயுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

வண்ணாத்தியாறு பகுதியில் ஒன்றரை ஏக்கர் அளவில் தென்னை செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்து. மூன்று நான்கு வருடம் கடந்த நிலையில் உள்ள 22 தென்னை மரங்களை நேற்றுமுன்தினம் நள்ளிரவில் யானைகள் முற்று முழுதாக அழித்ததுடன் சோளப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த பகுதிகளில் அழிவை ஏற்படுத்தியுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

# முல்லைத்தீவிலும் நேற்று தொழிற்சங்க போராட்டம்




முல்லைத்தீவு, மார்ச் 16

நாடளாவிய ரீதியில் பல தொழிற்சங்கங்கள் இணைந்து மாபெரும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டன. முல்லைத்தீவு மாவட்டத்திலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக மாவட்டத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் வெளி நோயாளர் பிரிவுகள் இயங்கவில்லை. அத்தியாவசியமான அவசர சேவை பிரிவு மட்டுமே இயங்கின. இதனால் நோயாளிகள் மிகவும் சிரமப்பட்டனர்.

இதேவேளை, பாடசாலைகளில் ஆசிரியர்கள் சமூகமளிக்காததால் பாடசாலைகள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டது.

பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகை மிக மிகக் குறைவான அளவில் காணப்பட்டது.

வங்கி ஊழியர்கள் பகிஷ்கரிப்பு காரணமாக வங்கிச் சேவைகள் இடம்பெறவில்லை. (அ)

# மின் கட்டண உயர்வுக்கு எதிராக மேன்முறையீடு!

கொழும்பு, மார்ச் 16

மின் கட்டண உயர்வை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை தள்ளுபடி செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ரத்து செய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மின்சார நுகர்வோர் சங்கம் மற்றும் சுற்றுச்சூழல் நீதி மையம் ஆகியவை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளன.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபை மற்றும் ஏனையோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவில், மின் கட்டணத்தை திருத்த அமைச்சர்கள் குழு எடுத்த முடிவு சட்டத்துக்கு எதிரானது என அறிவிக்கக் கோரப்பட்டுள்ளது.

இதன் மூலம் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அதிகாரங்களை அமைச்சர்கள் குழு குறைத்துள்ளதாக மேன்முறையீட்டு மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, தாங்கள் தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரணை செய்யாமல் நிராகரித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் எடுத்த முடிவு சட்டத்துக்கு முரணானது, அந்த முடிவை இரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

ஈழநாடு



# அமெரிக்காவில் அடுத்தடுத்து திவாலாகும் வங்கிகள்: 2008-ம் ஆண்டு நெருக்கடி மீண்டும் திரும்புகிறதா?




அமெரிக்காவில் ஒரே வாரத்தில் 2 வங்கிகள் அடுத்தடுத்து திவாலாகியுள்ளன. இதனால், உலகையே உலுக்கிய 2008-ம் ஆண்டு நெருக்கடி மீண்டும் வரப் போகிறதா? என்ற அச்சம் எழுந்துள்ளது. அமெரிக்க வங்கிகள் திவாலானது ஏன்? அதனை சமாளிக்க அந்நாட்டின் மத்திய வங்கி என்ன செய்கிறது? அதன் தாக்கம் உலகளவில் எப்படி இருக்கும்?

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணம் சான்டாகிளாரா நகரத்தை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்த சிலிகன் வேலி வங்கி (SVB) திவாலாகியுள்ளது. அந்த வங்கியின் 17 கிளைகளும் மூடப்பட்டுவிட்டன. வங்கியின் அனைத்து சொத்துகளையும் அமெரிக்க வங்கி ஒழுங்குமுறை அமைப்பு பறிமுதல் செய்துள்ளது.

**சிலிகன் வேலி வங்கியின் முக்கியத்துவம் என்ன?**

2008-ம் ஆண்டு நெருக்கடிக்குப் பிறகு அமெரிக்காவில் திவாலாகும் பெரிய வங்கி சிலிகன் வேலி வங்கி தான். 2022-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதிப்படி அதன் சொத்து மதிப்பு 209 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. அதன் கணக்கில் 1,743.4 பில்லியன் அமெரிக்க டாலர்கள் டெபாசிட் செய்யப்பட்டிருந்தன. அமெரிக்காவின் 16-வது பெரிய வங்கியாக அது திகழ்ந்தது.

புத்தாக்க தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யும் 2,500-க்கும் மேற்பட்ட வென்சர் கேபிட்டல் நிறுவனங்களுக்கு வங்கி சேவைகளை இந்த சிலிகன் வேலி வங்கி வழங்கி வந்ததாக தகவல்கள் கூறுகின்றன.

இந்த வங்கியின் வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவரும் 2.5 லட்சம் அமெரிக்க டாலர் அளவுக்கு காப்பீடு செய்யப்பட்டிருப்பதாகவும், அதற்கும் அதிகமான தொகையை சேமிப்பாக வைத்திருப்பவர்கள் உதவி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்றும் அமெரிக்க நிதி ஒழுங்குமுறை அமைப்பான பெடரல் டெபாசிட் இன்சூரன்ஸ் கார்பரேஷன் அறிவித்துள்ளது.

**அமெரிக்க பெடரல் ரிசர்வ் நடவடிக்கை என்ன?**

சிலிகன் வேலி வங்கி மற்றும் சிக்னேச்சர் வங்கி ஆகியவற்றின் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அவர்கள் சேமித்த பணம் முழுமையாக திரும்பக் கிடைக்கும் என்று அமெரிக்க நிதித் துறையும், வங்கி ஒழுங்குமுறை அமைப்புகளும் கூட்டாக அறிவித்துள்ளன.

வாடிக்கையாளர்கள் தங்களது பணத்தைக் கையாள வசதியாக தற்காலிகமாக புதிய வங்கி சேவையை அமெரிக்க பெடரல் டெபாசிட் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் உருவாக்கியுள்ளது. சிக்னேச்சர் வங்கி வாடிக்கையாளர்களும், கடன் வாங்கியவர்களும் தாமாகவே புதிய வங்கியின் வாடிக்கையாளர்களாகி விடுவார்கள் என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

சிலிகன் வேலி வங்கி வாடிக்கையாளர்கள் திங்கட்கிழமை முதல் தங்களது கணக்குகளை வழக்கம் போல் கையாள முடியும் என்றும் அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

**2 வங்கிகளின் வீழ்ச்சிக்கு காரணம் என்ன?**



சிலிகன் வேலி வங்கி திவாலான அடுத்த இரண்டே நாட்களில், நியூயார்க்கை தலைமையிடமாகக் கொண்ட சிக்னேச்சர் வங்கி (Signature bank) வீழ்ந்தது. அந்த வங்கியை அமெரிக்க பெடரல் டெபாசிட் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டுள்ளது. இந்த வங்கி 110.36 பில்லியன் அமெரிக்க டாலர் சொத்துகளையும், 88.59 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு டெபாசிட்களையும் கொண்டிருந்தது.

சிலிகன் வேலி வங்கி, மற்ற வங்கிகளைப் போலவே தனது கையிருப்பை அமெரிக்க பெடரல் ரிசர்வின் கடன் பத்திரங்கள் முதலீடு செய்ததாக நம்பப்படுகிறது.

பெடரல் ரிசர்வின் வட்டி விகிதங்கள் குறைவாக இருந்த வரையிலும் எந்த பிரச்னையும் இல்லாமல் இருந்தது. ஆனால், கொரோனா பேரிடருக்குப் பிந்தைய பொருளாதார சூழலில் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த பெடரல் ரிசர்வ் வட்டி விகிதங்களை உயர்த்தியதும் சிலிகன் வேலி வங்கி தள்ளாடத் தொடங்கியது.

இந்த காலத்தில், வாடிக்கையாளர்கள் தங்களது சேமிப்புக் கணக்கில் இருந்து பணத்தை அதிக அளவில் எடுத்ததால், புத்தாக்க தொழில் நிறுவனங்களுக்கு (Start up) நிதி திரட்டுவது சவாலானதாக இருந்தது.

சிலிகன் வேலி வங்கி, தனது முதலீட்டின் மதிப்பு குறைவாக இருந்த வேளையில், வாடிக்கையாளர்கள் அதிக அளவில் பணம் எடுத்ததால், அதனை ஈடுகட்ட சொந்த முதலீடுகளை விற்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

அந்த வகையில், கடந்த மார்ச் 8ம் தேதி மட்டும் 1.8 பில்லியன் அமெரிக்க டாலரை இழந்துவிட்டதாக அந்த வங்கி கூறியுள்ளது.

மார்ச் 9-ம் தேதிக்கு முன்பு வரை சிலிகன் வேலி வங்கியின் நிதி நிலைமை நன்றாகவே இருந்ததாக அமெரிக்க அரசு ஆவணங்கள் கூறுகின்றன. ஆனால், அந்த வங்கி நஷ்டத்தில் இயங்குவதாக பரவிய செய்தியால் மார்ச் 9-ம் தேதி மட்டும் 42 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு முதலீட்டாளர்களும், வாடிக்கையாளர்களும் பணத்தை எடுத்துவிட்டதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மார்ச் 9ம் தேதிப்படி, சிலிகன் வேலி வங்கியின் நிதி நிலைமை மைனஸ் 958 மில்லியன் என்கிறது அந்த அறிக்கை. இந்த சிக்கலை சமாளிக்க அந்த வங்கி மேற்கொண்ட நடவடிக்கைகள் பலன் தரவில்லை.

சிலிகன் வேலி வங்கி பெருமளவில் வென்சர் கேப்பிட்டல் நிறுவனங்களுக்கு வங்கி சேவை அளித்து வந்தது. திவாலான மற்றொரு வங்கியான சிக்னேச்சர் வங்கியோ கிரிப்டோ கரன்சி நிறுவனங்களுக்கு அதிக அளவில் சேவை அளித்து வந்தது.

திவாலான இரு வங்கிகளுக்கும் உள்ள ஒற்றுமை அவையிரண்டுமே ஒரு குறிப்பிட்ட துறையை மட்டுமே மையமாகக் கொண்டு இயங்கி வந்தவை என்பதுதான். அதுவே அந்த வங்கிகளுக்கு பெரிய பிரச்னையாகிப் போனது. அவற்றின் ஒட்டுமொத்த வர்த்தக மாடலும் ஒரு குறிப்பிட்ட துறையைச் சார்ந்திருந்ததும், பெடரல் ரிசர்வ் வட்டி விகிதங்களை அதிகரித்ததால் அவற்றின் முதலீடுகளின் மதிப்பு வீழ்ந்ததுமே தற்போதைய நிலைக்குக் காரணம் என்று நிதித்துறை நிபுணர்கள் கூறுகின்றனர். ●






# மகிந்த கொல்லாத நாய்கள்

நிலாந்தன்



கடந்த டிசம்பர் மாதம் யாழ்.பருத்தித்துறை வீதியில் மோட்டார் சைக்கிளில் போய்க்கொண்டிருந்தேன். வீதியை திடீரென்று குறுக்கறுத்து ஓடிய ஒரு தொகை நாய்களின் மீது மோதி விழுந்ததில் எனது கைவிரல் ஒன்று அறுந்து தொங்கியது. யாழ்.போதனா வைத்தியசாலையின் பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணர் எனது விரலைக் காப்பாற்றினார்.

நாய்களில் மோதிப் படுகாயம் அடைந்தவர்கள் மட்டுமல்ல, கோமாநிலைக்கு சென்றவர்களும் உண்டு என்று போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணத்தின் சிறிய ஒழுங்கைகளில் கட்டாக்காலி நாய்கள் பெருகி விட்டன. காலை வேளைகளில் எல்லாச் சிறிய தெருக்களிலும் நாயின் கழிவுகளைக் காணலாம்.

எனக்கு தெரிந்த ஒரு ஆசிரியை திருநெல்வேலி பகுதியில் உள் ஒழுங்குகளால் பாடசாலைக்கு செல்வதில்லை. ஏன் என்று கேட்டேன். “காலையில் எழுந்து குளித்து வெளிக்கிட்டு அந்த வீதி வழியாக சென்றால் எங்கும் நாயின் கழிவுகளைக் காணலாம். அந்தக் கழிவுகளில் மொய்க்கும் இலையான் மோட்டார் சைக்கிள் கடக்கும்போது அப்படியே எழும்பி எங்களுடைய முகங்களிலும் மோய்க்கிறது. அருவருப்பாக இருக்கும். அதைத் தவிர்ப்பதற்காக பிரதான சாலைகளின் ஊடாக பாடசாலைக்குச் செல்கிறேன்”என்று சொன்னார்.

அவர் குறிப்பிட்ட அந்த வீதி வழியாக நான் அடிக்கடி காலை வேளை போய் வருவேன். அப்பொழுதெல்லாம் சந்தைக்குக் கறிப்பிலைையைச் சுமந்து செல்லும் வியாபாரிகளை கண்டிருக்கிறேன். அவர்கள் கறிவேப்பிலைக் கிளைகளை சைக்கிள் கரியரில் வைத்துக் கட்டிக்கொண்டு போவார்கள். சைக்கிள் கரியரின் இருபக்கமும் தொங்கும் கறிவேப்பிலைக் கிளைகள் வீதியைத் தொட்டுக் கொண்டு போகும். அந்த வீதி நெடுக நாயின் மலம் இருக்கும். அதை பார்த்ததிலிருந்து நான் சந்தையில் கறிவேப்பிலை வாங்குவதே இல்லை. திருநெல்வேலி சந்தையில் மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான சந்தைகளில் வீதியோரங்களில் நாய் மலத்தைக் காணலாம். அந்த மலத்தில் மொய்க்கும் இலையான்கள் அப்படியே எழும்பி அந்த வீதியோரம் அமைந்திருக்கும் சாப்பாட்டுக் கடைகளிலும் மொய்க்கின்றன. ஆயின் நாம் சாப்பிடும் சாப்பாட்டின் சுகாதாரத்தை ஒரு முறை கற்பனை செய்து பாருங்கள்.

நாய் மலத்தை அகற்றுவது என்பது தெருநாய்களை அகற்றுவதுதான். தெரு நாய்களை ஏன் அகற்ற முடியவில்லை? அண்மையில் ஒரு நேர்காணலின்போது தெருநாய்களுக்கு உணவூட்டிய ஒருவர் கௌரவிக்கப்பட்டார். கனடாவில் இருந்து வந்த ஒரு நண்பர் அது தொடர்பாக பின்வருமாறு கேட்டார். ‘தெருநாய்களைப் பராமரிப்பது நல்ல விடயம். ஆனால் எப்படிப் பராமரிக்க வேண்டும்? வளர்ச்சியடைந்த நாடுகளின் நகரங்களின் தெருநாய்களுக்குப் பராமரிப்பு நிலையங்கள் உண்டு. அப்படிப்பட்ட பராமரிப்பு நிலையங்களில் கொண்டுபோய் நாய்களைச் சேர்ப்பதுதான் அதற்குரிய வழி. மாறாக கட்டாக்காலி நாய்களைத் தெருக்களிலேயே வைத்து பராமரிப்பது என்பது மோசமான ஒரு நடைமுறை. அதைப் பாராட்டலாமா?” என்று.

மாநகரங்களில் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கென்று ஒரு பொறிமுறை உண்டு. அதற்கென்று பராமரிப்பு நிலையங்களும் உண்டு. தவிர தமிழ



கத்தில் செயல்படும் “ப்ளூகுரஸ்” (BLUE CROSS) நிறுவனத்தை போன்ற தன்னார்வ நிறுவனங்களும் உண்டு. ஆனால் தமிழ்ப் பகுதிகளில் அவ்வாறு ஒரே ஒரு தன்னார்வ நிறுவனந்தான் உண்டு.

நாய்களைத் தெருக்களில் விடுவது குறிப்பாக பெண் நாய்க்குட்டிகளைத் தெருவில் விடுவது என்பது தமிழ்க் கலாச்சாரத்தின் சீரழிந்த ஒரு பகுதியாக பல தசாப்த காலமாக பின்பற்றப்பட்டு வருகிறது. இது தொடர்பாக யோகர் சுவாமிகள் சமாதி அடைவதற்கு முன்பு தெரிவித்த ஒரு தகவலை ஒரு சமயப் பெரியார் எனக்குச் சொன்னார். ஒருமுறை மருதனாமடம் சந்தையில் யோகர் சுவாமிகள் குந்தியிருந்தபோது, ஒரு சிறுவன் ஒரு பெட்டிக்குள் எதையோ காவிக் கொண்டு வந்திருக்கிறான். அப்பெட்டியை வைத்துக்கொண்டு நீண்டநேரமாக சுற்றுமுற்றும் பார்த்தபடி நின்றிருக்கிறான். நீண்டநேரமாக அச்சி றுவன் வீதியில் நிற்பதைக் கண்ட யோகர் பெட்டிக்குள் என்ன என்று கேட்டிருக்கி றார். பெட்டிக்குள் பெண் நாய்க்குட்டி கள் உண்டு என்று அவன் சொல்லியிருக்கிறான். அவற்றை மருதனாமடம் சந்தையில் விடுமாறு சொன்னார்கள். ஆனால் அங்கே இருப்பவர்கள் அதற்கு அனுமதிக்க மாட்டார்கள் என்பதனால், ஆளில்லாத வீதி ஓரத்தில் விடலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று அவன் சொல்லியிருக்கிறான். இதைக் குறித்து பின்னர் தனது அடியார்கள் மத்தியில் உரையாற்றிய யோகர், பெண் நாய்களை இவ்வாறு தெருக்களில் அனாதைகளாக விடுவது ஒரு பாவம். அதன் கர்ம வினையை யாழ்ப்பாணம் ஒரு நாள் அனுபவிக்கும். யாழ்ப்பாணத்தவர்களும் ஒரு நாள் தெருவில் வந்து நிற்க வேண்டியிருக்கும் என்று மனம் நொந்து கூறியிருக்கிறார்.

ஆனால் யோகர் சுவாமிகளுக்கு முன்னரும், பின்னரும், இப்பொழுதும்,பெண் நாய்க்குட்டிகள் தெருக்களில் விடப்படுகின்றன.

2015க்கு முன்புவரை இந்த நாய்களைப் பிடித்து கடலில் மூழ்கடித்துக் கொல்வார்கள். எமது சிறுவயது ஞாபகங்களில் நாய் வண்டி என்பது நம்மைப் பயமுறுத்தும் ஒரு வண்டிதான். இரண்டு பேர் அந்த வண்டியைத் தள்ளிக் கொண்டு வருவார்கள். பிடிபட்ட நாய்கள் சிறைக்கூண்டுக்குள் இருந்து கொண்டு எம்மைப் பரிதாபகரமாகப் பார்க்கும். யாழ் நகரப் பகுதியில் அவ்வாறு நாய் பிடிப்பதற்கு முழங்கைவரை ஒரு கை இல்லாத நகரசுத்தித் தொழிலாளர் ஒருவர் மாநகர சபையால் நியமிக்கப்பட்டிருந்தார். அவருடைய கையில் கம்பியாலான ஒரு சுருக்குத் தடம் இருக்கும். அந்த வண்டில் வீதியில் வரும்போது அவர் தன்னிடம் உள்ள தடியால் உள்ளே பிடிபட்டிருக்கும் நாய்களைக் குத்துவார். நாய்கள் கத்தும். அச்சத்தத்தைக் கேட்டு வீட்டிலிருக்கும் நாய்களும் தெரு நாய்களும் அந்த இடத்துக்கு வரும். அப்பொழுது அவர் நாய்களைப் பிடிப்பார். சுருக்குக் கம்பியில் சிக்கி நாய் துடிக்கும் காட்சி பரிதாபகரமாக இருக்கும். அதை அப்படியே இழுத்து வண்டிக்குள் ஏறிவார். வளர்ப்பு நாய்களை எஜமானர்கள் காசு கொடுத்து மீட்பார்கள். ஆனால் அனாதைகளான கட்டாக்காலி நாய்கள் பின்னர் கடலில் மூழ்கடித்துக் கொல்லப்படும். அதன் பின் கொல்லப்பட்ட நாய்களின் வால்களை வெட்டி கொண்டு வந்து கணக்குக் காட்டி தங்களுக்குரிய கொடுப்பனவைப் பெறுவார்களாம்.

2015ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ நாய்களை அவ்வாறு கொல்வதற்குத் தடை விதித்து ஒரு சுற்றுநிருபத்தை வெளியிட்டார். அதாவது 2009ஆம் ஆண்டு போர்க்களத்தில் சிக்கியிருந்த தமிழர்களை பூச்சி, புழுக்களைப் போல கொன்று யுத்தத்தை வென்ற ஒருவர், சரியாக ஆறு ஆண்டுகளின் பின் நாய்களைக் கொல்ல வேண்டாம் என்று உத்தரவிட்டார்.

அதன் பின் நாய்களைப் பிடிப்பவர்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. ஏனென்றால் பிடிக்கப்படும் நாய்களைப் பராமரிப்பதற்கு அரசாங்கம் உரிய பராமரிப்பு நிலையங்களை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. இவ்வாறான ஒரு பின்னணியில் யாழ் மாநகர சபை பிடித்த நாய்களைச் சிறிது காலம் கல்லுண்டாய் வெளியில் கொண்டு போய்விட்டது. ஆனால் அந்த நாய்கள் அயலில் உள்ள கிராமத்தவர்களின் கால்நடைகளைக் கடிக்கத் தொடங்கியதும் அது ஒரு முறைப்பாடாக வந்தது. அதைத் தொடர்ந்து அந்த முயற்சி கைவிடப்பட்டது. அதன்பின் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்படுவதில்லை.

கட்டாக்காலி நாய்களைப் பராமரிப்பதற்கென்று சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் ஒரு பராமரிப்பு நிலையத்தை ஆரம்பித்தார். ஆனால் அவரிடம் நாய்களைப் பிடிக்கும் ஏற்பாடு இல்லை. பிடிக்கப்பட்ட நாய்களை பராமரிக்கும் ஏற்பாடுதான் உண்டு. அதிலும் போதிய வளங்கள் இல்லை. தனக்குப் போதிய நிதி உதவியோ, துறைசார் உதவிகளோ அல்லது குறைந்தபட்சம் தார்மீக உதவிகளோ கிடைக்கவில்லை என்று அவர் கவலைப்பட்டார். தனது பராமரிப்பு நிலையத்தின் தராதரம் குறித்து ஒரு பகுதியினர் எழுப்பிய முறைப்பாடுகளால் அவர் அதிகம் நொந்து போயிருந்தார்.

அவரைப் பின்பற்றி யாழ்ப்பாணத்தில் உள்ள தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவரும் ஒரு நாய் பராமரிப்பு நிலையத்தை உருவாக்க முற்பட்டார். அதைக் குறித்தும் விமர்சனங்கள் எழுந்தன. அவர் அந்த முயற்சியைப் பாதியிலேயே கைவிட்டார். இப்பொழுது சிவபூமி அறக்கட்டளையின் ஒரே ஒரு நாய் பராமரிப்பு நிலையந்தான் வடக்கில் உண்டு. அங்கேயும் போதிய வளங்கள் இல்லை. ஆதரவு இல்லை. ஆறு.திருமுருகன் பெரும்பாலும் சலித்துப் போய்விட்டார். அந்த பராமரிப்பு நிலையத்தை முடிவிடலாமா என்று யோசிக்கும் அளவுக்கு அவர் நொந்து போய்விட்டார்.

ஆனால் தென்னிலங்கையில் நாய்களைப் பராமரிப்பதற்கு பல நிலையங்கள் உண்டு என்று கூறப்படுகிறது. அவ்வாறு அம்பாந்தோட்டையில் காணப்படும் பராமரிப்பு நிலையத்துக்கு வேண்டுமானால் வடக்கிலிருந்து நாய்களைக் கொண்டு வந்து ஒப்படைக்கலாம் என்று உள்ளூராட்சி சபை நிர்வாகிகளுக்கு தெரிவிக்கப் பட்டதாக ஒரு தகவல் உண்டு.

மனிதகுல வரலாற்றில் மனிதனின் முதல் வளர்ப்புப்பிராணி நாய்தான். மனிதன் வேட்டையாடி உணவு தேடுபவனாக இருக்கும்போதே வேட்டைத் துணையாக நாய்கள் இணைந்தன. அதன் பின் நதிக்கரை நாகரீகங்களில் வீட்டு வளர்ப்பு பிராணிகளாக நாய்கள் மனிதர்களோடு காணப்பட்டன. நாய்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவு பூர்வகாலத்திலிருந்தே தொடங்குகிறது. நன்றியுள்ளது. மனிதர்களைப்போல பழிவாங்காது. காவல் காப்பது என்றெல்லாம் போற்றப்பட்ட நாய்களை இந்துக்கள் வைரவக் கடவுளின் வாகனமாக உருவகித்து வைத்திருக்கிறார்கள். இவ்வாறு தமது காவல் கடவுள் ஒருவரின் வாகனமாகக் காணப்படும் நாய்களைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு யாருடையது ? யோகர் சுவாமிகள் 1960களின் நடுப்பகுதியில் மனம் நொந்து கூறிய அதே நிலைமைதான் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டின் பின்னரும் இப்பொழுதும் காணப்படுகிறது. நாய்களைப் பராமரிப்பதற்குக்கூட ஒரு வளம் பொருந்திய நிலையத்தை உருவாக்க முடியாத மக்களா நாம்?

# பொலிஸ் சீருடை துணி சீனாவால் அன்பளிப்பு!

கொழும்பு, மார்ச் 16

சீன அரசாங்கத்திடமிருந்து இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு நன்கொடையாக கிடைத்த பொலிஸ் சீருடை துணிகளை உத்தியோகபூர்வமாக பொலிஸ் திணைக்களத்துக்கு கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நன்கொடை தொடர்பான ஆவணங்கள், இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங்கால் ஜனாதிபதி முன்னிலையில் பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பான அமைச்சர் டிரான் அலஸிடம் கையளிக்கப்பட்டது.

பின்னர் ஜனாதிபதியும் நன்கொடைகளை பார்வையிட்டார். தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ஐ)

# யுவதி துஷ்பிரயோகம் இரு இளைஞர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 16

19 வயதான யுவதி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் நகர எல்லையில் வசிக்கும் 22 வயதுடைய இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுளை பிரதேசத்திலிருந்து அநுராதபுரத்துக்கு வந்த யுவதி வாடகை வீட்டில் தங்கியிருந்து உணவகம் ஒன்றில் பணிபுரிந்து வந்துள்ளார். அவரை, அண்மையில் ஒருநாளில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் கடத்தி சென்று துஷ்பிரயோகம் செய்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# நாகமலையில் நாக வழிபாடு

அம்பாறை, மார்ச் 16

சித்தாண்டியின் மேற்கே உள்ள இலுக்குப் பொத்தானை எனுமிடத்திலுள்ள வேலோடும் மலையருகேயுள்ள நாகமலையில் சித்தர்கள் குரல் அமைப்பினர் நாகவழிபாடு செய்தனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் அங்கு சென்று நாகவழிபாட்டை முறைப்படி ஆலய தர்மகத்தா சுப்ரமணியம் தியாகராஜா முன்னிலையில் சிறப்பாக நடத்தினர்.

# மின் கட்டண உயர்வை எதிர்த்து மீண்டும் மேன்முறையீடு!

கொழும்பு, மார்ச் 16

மின்கட்டண உயர்வை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனுவை தள்ளுபடி செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் எடுத்த தீர்ப்பை இரத்துச் செய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மின்சார நுகர்வோர் சங்கம் மற்றும் சுற்றுச்சூழல் நீதி மையம் ஊடாக குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனுவில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபை ஆகியன பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளன அண்மைக் காலமாக அமைச்சரவையில் மின்சார கட்டணத்தை திருத்தியமைக்கும் தீர்மானம் சட்டத்திற்கு முரணானது என குறித்த மனு வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜப்பானில் தொழில் என்றுகூறி மோசடியில் ஈடுபட்ட ஆசிரியர்!

கொழும்பு, மார்ச் 16

ஜப்பானில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி தலா 12 இலட்சம் ரூபாய் வீதம் பலரிடம் பண மோசடி செய்தமை தொடர்பில் மாத்தறையின் பிரதான பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவருக்கு எதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தங்காலை பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவுக்கே இந்த முறைப்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளன.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து ஜப்பானில் வேலை பெற்றுத் தருவதாக போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து, குறித்த ஆசிரியர் சுமார் ஒரு கோடி ரூபாய் வரை ஏமாற்றியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# ஒரு வாக்குச்சீட்டுகூட அச்சிடப்படவில்லை!

## அரச அச்சக சேவை சங்கம்

கொழும்பு, மார்ச் 16

ஏப்ரல் 25ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தலை நடத்த இது வரை ஒரு வாக்குச்சீட்டுக்கூட அச்சிடப்படவில்லை. நிதி வழங்கும் நோக்கம் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் கிடையாது, வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் நோக்கம் அரச அச்சகத் திணைக்கள தலைவருக்கும் கிடையாது என்று அரச அச்சக திணைக்கள சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் அசங்க சதருவ தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுமா, இல்லையா என்ற சந்தேகம் காணப்படுகிறது. இலங்கை அரசியல் வரலாற்றில் இதுபோல் எந்த தேர்தலுக்கும் இவ்வாறான நிலை ஏற்படவில்லை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் பல வழிகளில் தடைகளை ஏற்படுத்தியுள்ளது. அரச அச்சகத் திணைக்கள தலைவரும் அரசாங்கத்தின் நோக்கத்துக்கு அமைய செயல்படுகிறார் - என்றார்.

## கல்வி tv CHANNEL-1

**09.03.2023**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**09.03.2023**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

### தொழிற்சங்க போராட்டம் காரணமாக

## மட்டக்களப்பு பாடசாலைகளில் நேற்று கல்வி நடவடிக்கைகள் முற்றாக பாதிப்பு!




மட்டக்களப்பு, மார்ச் 16

இலங்கையில் தொழிற்சங்கள் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் காரணமாக கல்வி நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நேற்று கல்வி நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டன.

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நேற்று ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வரவின்மையால் வெறிச்சோடிக் காணப்பட்டன.

ஒரு சில பாடசாலைகளில் மாணவர்கள் வருகைதந்து திரும்பிச் சென்றதை காணமுடிந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களிலும் நேற்று கல்வி நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டன.

வரி அதிகரிப்பு, மின்சார கட்டணம் அதிகரிப்பு,வாழ்க்கை செலவு அதிகரிப்பு உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் 40க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இணைந்து பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# திருமலை கன்னியா வெந்நீர் ஊற்று; தொல்பொருள் திணைக்களம் வசம்!

திருமலை, மார்ச் 16

**திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றின் வருமான முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புப் பணிகள் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.**



இந்துக்களின் வரலாற்று தொல்பொருள் தளமான கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில், பௌத்த மயமாக்கல் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கன்னியா வெந்நீர் ஊற்று தொல்பொருள் தளத்தை, அனுராதபுர காலத்தைச் சேர்ந்த பௌத்த இடிபாடுகளைக் கொண்ட தனித்துவமான இடமாக அடையாளம் காண முடியும் என தொல்பொருள் திணைக்களத்தன் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு முதல் கன்னியா வெந்நீர் ஊற்று, தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதோடு, 2011 ஒக்ரோபர் 9ஆம் திகதியிட்ட அரச வர்த்தமானி பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக திருகோணமலை பட்டினமும் சூழல் பிரதேச சபை, திருகோணமலை மாவட்ட செயலகம் என்பன கன்னியா வெந்நீர் ஊற்றின் வருமான முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வந்தன. இந்த நிலையில், தொல்பொருள் திணைக்களம் தலையிட்டு கன்னியா வெந்நீர் ஊற்றின் மூலமாக கிடைக்கும் வருமானத்தை, திணைக்களத்தின் கணக்கு ஊடாக அரச வருமானத்துடன் சேர்க்கும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம், திருகோணமலை பிரதேச தொல்பொருள் திணைக்களம் வருமான முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க உள்ளிட்ட அதிகாரிகளின் தலைமையில் இடம்பெற்றுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# காரைதீவில் அரச நெல் கொள்வனவு ஆரம்பம்!

அம்பாறை, மார்ச் 16

காரைதீவு பிரதேச விவசாயிகளிடமிருந்து அரசாங்க நெல் கொள்வனவு வேலைத் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தலைமையில், காரைதீவு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மா.சிதம்பரநாதன் பிரசன்னத்தில், மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் எஸ்.எம்.கலீஸ் முன்னிலையில், உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபன் சகிதம் அரச நெல் கொள்வனவு இடம்பெற்றது.



மாவடிப்பள்ளி தனியார் அரிசி ஆலையில் முதற்கட்டமாக ஒரு தொகுதி விவசாயிகளிலிருந்து நேற்று கொள்வனவு செய்யப்பட்டது .

ஈரப்பதன் 1- 14 வீதமுள்ள நெல் ஒரு கிலோ 100ருபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. 14-22 வீதமுள்ள நெல் கிலோ 88 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்பட்டது.

குறித்த விவசாயிகள் உரம் பெற்ற பற்றுச்சீட்டு கைவசம் வைத்திருக்கவேண்டும்.

உச்சகட்டமாக ஒரு விவசாயிடமிருந்து 5000 கிலோ நெல் கொள்வனவு செய்யப்பட்டது.

ஒரு ஏக்கர் உள்ள விவசாயிடமிருந்து 2000 கிலோ நெல்லும் இரண்டு ஏக்கர் உள்ள விவசாயிடமிருந்து 4000 கிலோ நெல்லும் அதனைவிட கூடுதலாக காணி உள்ள விவசாயிடமிருந்து உச்சகட்டமாக 5000 கிலோ நெல்லும் கொள்வனவு செய்யப்பட்டது. (அ)

# ஏறாவூர் பொதுச் சந்தை விரைவில் புத்துயிர் பெறும்

அம்பாறை, மார்ச் 16

ஏறாவூர் பொதுச்சந்தை 350 மில்லியன் ரூபாய் செலவில் மீள நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான பேச்சு, அண்மையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.


இதில், சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

ஏறாவூர் பொதுச் சந்தையை மீள நிர்மாணிப்பதற்கான மதிப்பீட்டுத் தொகையைத் தீர்மானிப்பதற்கான, விசேட குழுவொன்றும், இக்கலந்துரையாடலில் நியமிக்கப்பட்டது.

இந்த நிதியை அமைச்சரவையின் அனுமதியுடன் பெறுவதற்கு கூட்டு அமைச்சரவைப் பத்திரமும் தயாரிக்கப்படவுள்ளது.

நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு என்பன இணைந்து இந்த கூட்டுப் பத்திரத்தை தயாரிக்கவுள்ளனது.

இதற்கிடையில் இது தொடர்பில் அமைச்சர் பிரசன்ன ரணத்துங்கவுடன் இரண்டு வாரங்களில் அறிக்கை ஒன்றை கையளிப்பது எனவும் இங்கு முடிவு செய்யப்பட்டது. (அ)



தொழிற்சங்கக் கூட்டமைப்பு நேற்று முன்தினம் நடத்திய பணி பகிஷ்கரிப்பு கல்முனை ஆதார வைத்தியசாலையிலும் எதிரொலித்தது. இதனால் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் பிரிவு என்பன வெறிச்சோடின. (அ)

# மட்டக்களப்புக்கான ரயில் சேவை பாதிப்பு




மட்டக்களப்பு, மார்ச் 16

அரசாங்கத்துக்கெதிரான ரயில் திணைக்கள ஊழியர்களின் பணி பகிஷ்கரிப்பு காரணமாக மட்டக்களப்புக்கும் கொழும்புக்குமிடையிலான அனைத்து ரயில் சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு ரயில் நிலைய பிரதம அதிபர் தெரிவித்தார்.

தினமும் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு மூன்று ரயில் சேவைகளும் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு மூன்று சேவைகளும் மட்டக்களப்பிலிருந்து மாகோவுக்கு இரு சேவைகளும் இடம்பெற்று வந்தன.

தற்போதைய வேலை நிறுத்தத்தினால் அனைத்து சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு ரயில் நிலையம் நேற்று பயணிகளின் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது. (அ)

# பாகிஸ்தான் மக்கள் பின்வாங்கக்கூடாது

## தொடர்ந்து போராடவேண்டும் அழைக்கிறார் இம்ரான் கான்

**இஸ்லாமாபாத், மார்ச் 16**

**தான் கைது செய்யப்பட்டாலோ அல்லது கொலை செய்யப்பட்டாலோ, பாகிஸ்தான் மக்கள் பின்வாங்காமல் தொடர்ந்து போராட வேண்டும் என பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் அழைப்பு விடுத்துள்ளார்.**




பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் ஆதரவாளர்களுக்கும், காவல்துறையினருக்கும் இடையே நேற்று முன் தினம் இரவு மோதல் நிலை ஏற்பட்டுள்ளது.

இம்ரான் கானை கைதுசெய்ய அந்த நாட்டு காவல்துறையினர், லாஹூரில் உள்ள அவரது இல்லத்திற்கு செல்ல முயற்சித்தபோது, மோதல் நிலை ஏற்பட்டுள்ளது.

இம்ரான் கானை கைதுசெய்து எதிர்வரும் 18ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மாவட்ட நீதிமன்றம் ஒன்று காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து, இம்ரான் கானை கைதுசெய்வதற்கு காவல்துறையினர் லாஹூரில் உள்ள அவரின் இல்லத்திற்கு செல்ல முயற்சித்தபோது, இம்ரான் கானின் கட்சி ஆதரவாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, அவர்களைக் கலைப்பதற்காக, காவல்துறையினர் கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர்த்தாரை பிரயோகங்களை மேற்கொண்டுள்ளனர்.

இம்ரான் கானுக்கு எதிராக 70ற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதில், பிரதமராக இருந்தபோது கிடைத்த பரிசு பொருட்களை அரசிடம் ஒப்படைக்காமல் முறைகேடாக விற்பனை செய்த வழக்கில், இம்ரான் கானை கைதுசெய்து எதிர்வரும் 18ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தான் எப்போது வேண்டுமானாலும் கைது செய்யப்படலாம் என வீட்டிலிருந்தபடியே வீடியோ வெளியிட்ட இம்ரான் கான், மக்கள் உரிமைகளுக்காகத் தெருவில் இறங்கிப் போராடுமாறு அறைகூவல் விடுத்துள்ளார். (அ)



## கொலம்பியாவில் அரை நீர்மூழ்கியில் போதைப்பொருள் கடத்தல் முயற்சி!

பொகோட்டா, மார்ச் 16

கொலம்பியவில் அரை நீர்மூழ்கி கப்பலில் போதைப் பொருள் கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி பிசுபிசுத்துள்ளது.

3 தொன் கொக்கெய்ன் போதைப்பொருளுடன் அரை நீர்மூழ்கிக் கப்பல் மீட்கப்பட்டது.

கப்பலுக்குள் இருவர் உயிரிழந்த நிலையிலும், இருவர் உயிருக்கு போராடியபடியும் காணப்பட்டதாக கொலம்பியா கடற்படை கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது,

பசிபிக் பெருங்கடலில் இந்த அரை நீரில் மூழ்கக்கூடிய கப்பல் கைப்பற்றப்பட்டது.

உயிர் பிழைத்த இரண்டு கடத்தல்காரர்களும் மோசமான உடல்நிலையில் உள்ளனர். அவர்களின் உயிரைக் காப்பாற்ற மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.

“எரிபொருளில் இருந்து நச்சு வாயுக்கள் உருவாகியதால், அரை நீரில் மூழ்கக்கூடிய கப்பலுக்குள் விபத்து ஏற்பட்டதாகத் தெரிகிறது” என்று கடற்படை தெரிவித்துள்ளது.

படகில் உள்ள எரிபொருள் பிரச்னைகளால் ஏற்படும் நச்சுப் புகைகளை உள்ளிழுப்பதால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம் என கடற்படை தெரிவித்தது.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி 87 மில்லியன் டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நீர்மூழ்கிக் கப்பல், மீட்கப்பட்டவர்கள், உடல்கள் ஆகியவை ஈக்வடோர் எல்லைக்கு அருகே தென்மேற்கு கொலம்பியாவில் உள்ள டுமாகோவில் உள்ள துறைமுகத்திற்கு கடற்படையால் அழைத்துச் செல்லப்பட்டன. போதைப்பொருள் ஏற்றுமதி மத்திய அமெரிக்காவிற்கு சென்றதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மலாவி, மொசாம்பிக்கில் சூறாவளி 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு!

மபுட்டோ, மார்ச் 16

தென்னாப்பிரிக்காவின் பிரதான நிலப்பகுதியை தாக்கிய ஃப்ரெடி சூறாவளியால், மலாவி மற்றும் மொசாம்பிக் ஆகிய நாடுகளில் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

சில வாரங்களில் இரண்டாவது முறையாக தாக்கிய ஃப்ரெடி சூறாவளியால் ஏற்பட்ட பலத்த காற்று மற்றும் பலத்த மழைக் காரணமாக, ஒரே இரவில் வீடுகள் மற்றும் உறங்கிக் கொண்டிருந்தவர்கள், மண்சரிவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

பெரும் பாதிப்பைச் சந்தித்த மலாவியில் இதன்போது, குறைந்தது 99 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 134 பேர் காயமடைந்துள்ளனர் மற்றும் 16 பேர் காணாமல் போயுள்ளனர். மலாவியின் வணிகத் தலைநகரான பிளான்டைரில் 85 பேர் உயிரிழந்துள்ளனர்.


‘எண்ணிக்கை அதிகரிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்’ என்று பேரிடர் மேலாண்மை விவகாரத் துறையின் ஆணையர் சார்லஸ் கலெம்பா தெரிவித்தார்.

அண்டை நாடான மொசாம்பிக்கில், குறைந்தது 10 பேர் உயிரிழந்தனர் மற்றும் 14 பேர் காயமடைந்தனர்.

புயலின் இரண்டாவது நிலச்சரிவின் பாதிப்பு எதிர்பார்த்ததை விட மோசமாக இருப்பதாக மொசாம்பிக் தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

## வடகொரியா 7 ஆவது அணுகுண்டு சோதனையை நடத்த வாய்ப்புண்டு

### அங்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்கிறது அமெரிக்கா



நியூயோர்க், மார்ச் 16

வடகொரியாவில் மீண்டும் அணுகுண்டுச் சோதனை நடத்தினால் அங்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்படும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் செய்தி தொடர்பாளர் நெட் பிரைஸ் நெட் பிறைஸ் தெரிவித்துள்ளார்.

வடகொரியா 7ஆவது முறையாக அணுகுண்டு சோதனையை நடத்த வாய்ப்புள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வடகொரியாவுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் கடந்த 5 ஆண்டுகளாக தென் கொரியாவும் அமெரிக்க இராணுவ கூட்டுப் படையினரும் இணைந்து பயிற்சி எடுத்து வருகின்றனர்.

வடகொரியா உலக நாடுகளின் எச்சரிக்கையை மீறி கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாக தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

கண்டம் விட்டு கண்டம் பாயும் பெலிஸ்டிக் ஏவுகணை சோதனைகளை நடத்தி அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுகளை வடகொரிய அச்சுறுத்தி வருகிறது.

இந்தநிலையில் இது குறித்து செய்தியாளர் மத்தியில் கருத்துரைத்த அமெரிக்க அரசாங்கத்தின் செய்தி தொடர்பாளர் நெட் பிரைஸ், வடகொரியா 7 ஆவது முறையாக அணுகுண்டுச் சோதனை நடத்த வாய்ப்பு உள்ளதாக குறிப்பிட்டார்.

அதற்கான இறுதிக்கட்ட பணிகளை வடகொரியா மேற்கொண்டு வருகிறது.

வடகொரியா 7 ஆவது அணுகுண்டு சோதனையை நடத்தினால் அந்த பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்படும் என அவர் குறிப்பிட்டார். (அ)

## ரஷ்ய போர் விமானம் அமெரிக்காவின் ட்ரோனை மோதித் தள்ளியது!

### ஆபத்தான விளையாட்டு என்கிறது வோஷிங்டன்

வொஷிங்டன், மார்ச் 16

அமெரிக்கா அதன் நவீன அதி உயர் பறப்புச் சக்தி கொண்ட வேவு ட்ரோன் விமானம் ஒன்றைக் கருங்கடல் பிரதேசத்தில் இழந்துள்ளது.

ரஷ்யாவின் சுகோய் ரகப் போர் விமானங்கள் கருங்கடலுக்கு மேலே சர்வதேச வான் பரப்பில் வைத்து அமெரிக்காவின் ஆட்களின்றிப் பறக்கும் அந்த ட்ரோன் விமானத்தை மோதியுள்ளன என்று அமெரிக்கப் படைகளது ஐரோப்பியக் கட்டளைப் பீடம் தெரிவித்துள்ளது.

கருங்கடலுக்கு மேலே வழக்கமான வான் பறப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த எம்கியூ - 9 ரீப்பர் ரக ட்ரோன் விமானத்தையே ரஷ்யாவின் சுக்கோய் சுகோய்- 27 ரகப் போர் விமானங்கள் இரண்டு நேற்று முன் தினம் காலை வழிமறித்து அதன் இறக்கைப் பகுதிகளை மோதிச் சேதப்படுத்தின என்றும் அதனால் அது கடலில் வீழ்ந்து மூழ்கியதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. இந்தச் செயலை “ஆபத்தானது”, “தொழில் முறை சாராதது”, “தவறான எடைபோடல்களையும் எதிர்பாராத யுத்த விரிவாக்கத்தையும் ஏற்படுத்திவிடக் கூடியது” - என்று அமெரிக்கப் படைகளின் கட்டளைப் பீடம் எச்சரித்துள்ளது.

கருங்கடல் வான் பரப்பில் உக்ரைனுக்கு அருகே உள்ளூர் நேரப்படி நேற்று முன் தினம் காலை இடம்பெற்ற இந்த வான் வெளிச் சம்பவம் தொடர்பாக மொஸ்கோ தரப்பில் இருந்து எந்தத் தகவல்களும் உடனடியாக வெளியிடப்படவில்லை.

ரஷ்ய விமானங்கள் தமது ட்ரோனை மோதுவதற்கு முன்பாக அதன் மீது பல தடவைகள் எரிபொருளை விசிறிச் செயலிழக்கச் செய்ய முயன்றன என்று அமெரிக்கா குற்றம் சுமத்தி உள்ளது. கருங்கடல் உட்பட சர்வதேச வான் பரப்பில் அமெரிக்கா மற்றும் அதன் நேச அணியின் விமானங்களைச் சந்திக்கின்ற சமயத்தில் ரஷ்ய விமானிகள் புரிகின்ற புதிய பாணி யிலான ஒரு செயலை இந்தச் சம்பவம் காட்டுவதா கவும் அமெரிக்கப் படைகளின் ஐரோப் பியக் கட்டளைப் பீடம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வோஷிங்டனில் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் அமெரிக்காவுக்கான ரஷ்யத் தூதரை அழைத்து ட்ரோன் மோதி வீழ்த்தப்பட்ட சம்பவத்துக்காகக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் யுத்தப் பிராந்தியத்தில் அமெரிக்கா வேவுப் பணிகளுக்காக அதன் நவீன ட்ரோன் விமானங்களைப் பயன்படுத்தி வருகிறது. ஆட்களின்றிப் பறக்கின்ற “எம்கியூ - 9 ரீப்பர்” ட்ரோன்கள் 20 மீற்றர்கள் நீள இறக்கை கொண்ட மிகப் பெரிய அளவுள்ள வான் ஊர்திகள் ஆகும். வானில் அதி உயரத்தில் பறந்தவாறு வேவு பார்ப்பதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்டவை. (அ)

### மகளிர் பிறீமியர் லீக்:

# இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முதல் அணியாக மும்பை தகுதி!

மும்பை, மார்ச் 16

குஜராத் அணியை 55 ஓட்டங்களால் வீழ்த்தி மகளிர் பிறீமியர் லீக்கில் முதல் அணியாக இறுதிப் போட்டிக்கு முந்தைய சுற்றுக்கு (பிளே ஓவ்) மும்பை அணி தகுதி பெற்றுள்ளது.

மகளிர் பிறீமியர் லீக்கின் முதல் தொடர் இந்தியாவில் நடக்கிறது. இந்தத் தொடரில், இதுவரை விளையாடிய 5 போட்டிகளிலும் தோல்வியடையாத அணியாக மும்பை இந்தியன்ஸ் உள்ளது.

நேற்று முன்தினம் இரவு குஜராத் ஜெயன்ட்ஸ் அணியை மும்பை இந்தியன்ஸ் எதிர்கொண்டது. முதலில், துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது ஓவரில் ஹெய்லி மத்தியூஸ் (0) ஆட்டமிழந்த பின்னர் யஸ்திகா பாட்டியாவும் நெட் சிவர் ப்ரண்டும் 2ஆவது விக்கெட்டுக்காக 74 ஓட்டங்களை பகிர்ந்தனர்.

நெட் சிவர் - ப்றன்ட் 36 ஓட்டங்களையும் யஸ்திகா பாட்டியா 44 ஓட்டங்களையும் பெற்றனர். இந்நிலையில் 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்த அணித் தலைவி ஹார்மன்ப்ரீத் கோர், அமேலியா கேர் 51 ஓட்டங்களை இணைந்து பெற்றனர்.

அமேலியா கேர் 19 ஓட்டங்களுடன் வெளியேறினார். அதன் பின்னர் ஒரு பக்கத்தில் சீரான இடைவெளியில் விக்கெட்கள் சரிய மறு பக்கத்தில் ஹார்மன்ப்ரீத் கோர் 30 பந்துகளை எதிர்கொண்டு 7 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 51 ஓட்டங்களைக் குவித்தார்.

குஜராத்தின் பந்துவீச்சில் ஏஷ்லி கார்ட்னர் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

163 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

முதலாவது பந்திலேயே சோபியா டன்க்லியின் விக்கெட்டை இழந்த குஜராத் அதன் பின்னர் மீளவில்லை. துடுப்பாட்டத்தில் 4 வீராங்கனைகளே 10 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர். ஏனையவர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் வெளியேறினர்.



திறமையாக துடுப்பெடுத்தாடிய ஹார்லீன் டியோல் 22 ஓட்டங்களை அதிகப்பட்சமாக பெற்றார். அவரை விட அணித் தலைவி ஸ்நேஹ் ராணா 20 ஓட்டங்களையும் சுஷ்மா வர்மா 18 ஓட்டங்களையும சபினெனி மேகனா 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நெட் சிவர் பிரண்ட், ஹெய்லி மெத்யூஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் அமேலியா கெர் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

(ஐ)

# இலங்கையுடனான தொடர் வில்லியம்சன் விடுவிப்பு!



வெலிங்டன், மார்ச் 16

ஐ. பி. எல். தொடரில் விளையாடுவதற்காக கேன் வில்லியம்சன், ரிம் சவுதி ஆகியோர் இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணியானது நியூசிலாந்து சென்றுள்ளது. இரு அணிகளும் இரு டெஸ்ட் போட்டிகள் தொடரில் விளையாடுகின்றன. இதில், முதல் போட்டியில் நியூசிலாந்து வென்று முன்னிலை வகிக்கிறது. இந்த நிலையில், இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை வெலிங்டனில் ஆரம்பமாகிறது.

டெஸ்ட் தொடரின் பின்னர், இரு அணிகளும் 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டி, 3 இருபது- 20 கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரில் மோதவுள்ளன. இதில் ஒருநாள் போட்டித் தொடர் 25, 28, 31ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிக் கப்பட்டுள்ளது. இதில், ஐ. பி. எல். தொடரில் விளை யாடும் அந்த அணியின் நட்சத்திர வீரர்கள் இடம்பெறவில்லை.

இதன்படி, கேன் வில்லியம்சன் (குஜராத் ரைட்டன்ஸ்), ரிம் சவுதி (கொல்கத்தா நைற் ரைடர்ஸ்), டேவன் கொன்வே, மிற்செல் சாண்ட்னர் (சென்னை சுப்பர் கிங்ஸ்) ஆகியோருக்கே ஐ. பி. எல்லில் பங்கேற்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



# உலகக் கிண்ணத்தின் பின்னர் ஹார்திக் பாண்ட்யா தலைவர்!

மும்பை, மார்ச் 16

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மும்பையில் நடைபெறவுள்ள முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெறும் பட்சத்தில், உலகக் கிண்ணத் தொடருக்கு பின்னர் இந்திய அணியின் ஒருநாள்போட்டியின் தலைவராக ஹார்திக் பாண்ட்யா இருப்பார் என சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் இடையே 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடர் நடைபெறவுள்ளது. இதன் முதல் ஆட்டம் வரும் 17ஆம் திகதி மும்பையில் நடைபெறுகிறது. குடும்ப காரணங்களுக்காக இந்த ஆட்டத்தில் அணித் தலைவர் ரோஹித் சர்மா கலந்துகொள்ளவில்லை. இதனால் ஹார்திக் பாண்ட்யா தலைமையில் இந்திய அணி களமிறங்க உள்ளது.

சகல துறை வீரரான ஹார்திக் பாண்ட்யா, கடந்த ஆண்டு ஐ. பி. எல். தொடரில் அறிமுக அணியான குஜராத் ரைட்டன்ஸ் அணிக்கு தலைமை தாங்கி முதல் தொடரிலேயே பட்டம் வென்று கொடுத்தார். சமீபகாலமாக இருபது - 20இல் இந்திய அணியின் தலைவராகவும் செயல்பட்டு வருகிறார். இதனால் 50 ஓவர் போட்டியில் அவரின் தலைமைத்துவம் எப்படி? இருக்கும் என்பதை காண ரசிகர்கள் ஆவலுடன் உள்ளனர்.

இந்நிலையில் இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சுனில் கவாஸ்கர் கூறுகையில்,

இருபது - 20 கிரிக்கெட் மட்டத்தில் குஜராத் ரைட்டன்ஸ் மற்றும்இந்திய அணிக்கு ஹார்திக் பாண்ட்யா தலைவராக செயல்பட்டபோது அவரின் தலைமைத்துவம் என்னை மிகவும் கவர்ந்தது. அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மும்பையில் நடைபெற உள்ள முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தலைவராக ஹார்திக் பாண்ட்யா இந்திய அணியை வெற்றி பெற செய்யும் பட்சத்தில், இந்த ஆண்டு இறுதியில் நடைபெற உள்ள 50 ஓவர் உலகக் கோப்பை தொடருக்கு பின்னர் அவரால் இந்திய அணியின் ஒருநாள் போட்டியின் தலைவராக இருக்க முடியும் என நான் நம்புகிறேன் - என்று கூறியுள்ளார். (ஐ)

# 2026 உலகக் கிண்ண தொடர் 48 நாடுகள்; 104 போட்டிகள்!




உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாக்களில் ஒன்று உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியாகும். இது 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது.

கடைசியாக உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டி கடந்த ஆண்டு கட்டாரில் நடந்தது. கட்டாரில் நடந்த 22ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் ஆர்ஜென்ரீனா சம்பியன் பட்டம் பெற்றது.

23ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி கனடா, மெக்சிகோ, அமெரிக்காவில் நடத்தப்படுகிறது. 2026 ஜூன் 11 முதல் ஜூலை 19ஆம் திகதி வரை இந்த போட்டி நடக்கிறது. இந்த உலகக் கிண்ணத் தொடரில் மொத்தம் 48 நாடுகள் பங்கேற்கின்றன. கடந்த உலகக் கிண்ணத்தைவிட 16 நாடுகள் கூடுதலாகும்.

விளையாடும் 48 அணிகளும் 12 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் 4 நாடுகள் இடம்பெற்றிருக்கும். மொத்தம் 104 ஆட்டங்கள் நடைபெறும். கத்தார் உலகக் கிண்ணத்தை விட 40 போட்டிகள் அதிகமாகும். (ஐ)

# இங்கிலாந்துடனான ரி -20 தொடர் முழுமையாக பங்களாதேஷ் வசம்!




டாக்கா, மார்ச் 16

நடப்பு இருபது - 20 உலக சம்பியனான இங்கிலாந்து கிரிக்கெட் அணியை இருபது -20 தொடரில் 3-0 என்ற கணக்கில் வெள்ளையடிப்பு செய்துள்ளது பங்களாதேஷ். இந்த வெற்றி அந்த அணியின் வரலாற்று சிறப்புமிக்க வெற்றிகளில் ஒன்றாக பதிவாகியுள்ளது.

டாக்கா நகரில் நடைபெற்ற மூன்றாவது மற்றும் கடைசி இருபது - 20 போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி களத்தடுப்பில் ஈடுபட்டது.

இதனால், முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 20 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 158 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணிக்காக விக்கெட் காப்பாளர் லிட்டன் தாஸ் 73 ஓட்டங்கள் எடுத்தார். நஜ்முல் ஹூசைன் ஷாண்டோ 47 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

159 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இங்கிலாந்து விரட்டியது. டேவிட் மலான் 53 ஓட்டங்கள், பட்லர் 40 ஓட்டங்கள் எடுத்தனர். இருவரும் அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழந்தனர். இதில், பட்லர் ரன் அவுட் ஆனார். அதன்பிறகு இங்கிலாந்து ஓட்டங்களை குவிக்க தடுமாறியது. மொயின் அலி, பென் டக்கெட், சாம் கரன் ஆகியோர் தங்களது விக்கெட்களை இழந்தனர்.

20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 142 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தது இங்கிலாந்து. இதன் மூலம் 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் வெற்றி பெற்றது.

இந்தத் தொடரின் முதல் இரண்டு போட்டிகளில் இரண்டாவதாக துடுப்பெடுத்தாடி வென்றிருந்தது பங்களாதேஷ் கடைசி போட்டியில் எதிரணியின் ஓட்டக் குவிப்பை தடுத்தது. தொடர் நாயகன் விருதை ஷாண்டோ வென்றார்.

# ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தல் நடைபெறாது

## உறுதிப்படுத்தினார் அமைச்சர்



கொழும்பு, மார்ச் 16

**உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் ஏப்ரல் 25 ஆம் திகதி நடத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில், அத்தினத்தில் தேர்தல் நடைபெறாது என உறுதியாக அறிவித்துள்ளார் அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ.**

தனியார் தொலைக்காட்சி யொன்றில் ஒளிபரப்பாகிய அரசியல் விவாத நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துகளை முன் வைக்கையிலேயே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்- உள்ளூராட்சிச்சபைத் தேர்தலால் இந்நாட்டில் எந்தவொரு மாற்றமும் ஏற்படப் போவதில்லை. தேர்தல் நடைபெறும் என்ற போதிலும் அது ஏப்ரல் 25 ஆம் திகதி நடைபெறுமா என்பது சந்தேகமே. அந்நாளில் தேர்தல் நடக்காது என்பதே எனது உறுதியான கருத்து.

தேர்தலை விடவும் முக்கியத்துவம்-முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய விடயங்கள் உள்ளன. அவை தொடர்பிலேயே கவனம் செலுத்தப்படுகின்றது. தேர்தலைவிடவும் மக்களுக்கு உணவு மற்றும் சுகாதார தேவைகளே அவசியம்-என்றார்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்த பின்னரே அமைச்சரவை மாற்றம் இடம்பெறும். இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பலரும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவார்கள் என்றும் அமைச்சர் ஹரின் குறிப்பிட்டார். (அ)



# பலாலி வடக்கு மீள்குடியேற்றம் நகாமா நிறுவனம் கள விஜயம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

பலாலி பகுதியில் கடந்த மாதம் 03 ஆம் திகதி 108 ஏக்கர் காணிகள் மீள் குடியேற்ற வசதிகளை மேற்கொள்வதற்காக விடுவிக்கப்பட்ட நிலையில் தற்காலிக முகாம்களில் வசித்து வரும் குடும்பங்களின் மீள்குடியேற்றத்துக்கு திட்ட முன்னெடுப்புக்களை யாழ். மாவட்ட செயலகம் மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் முன்னெடுத்து வருகின்றன.

இந்த நிலையில் விடுவிக்கப்பட்ட பலாலி பகுதிகளில் உள்ள மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் பார்வையிடும் முகமாகவும் தற்காலிக வீட்டுத் திட்டங்களை வழங்குவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கும் நகாமா நிறுவனம் மற்றும் நேர்வேயை தளமாகக் கொண்டு இயங்கும் போருட் நிறுவனம் இணைந்து நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தன.

தற்காலிக நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் மீள் குடியேற்றத்தை விரைவுபடுத்தும் முகமாகவும் மீள்குடியேற்ற மக்களின் வாழ்வாதாரம் மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் முகமாகவும் பிரதேச செயலகத்துடன் இணைந்து அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதார உதவிகளை மேற்கொள்வதற்கான மேற்பார்வை விஜயமாக குறித்த விஜயம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

இந்த விஜயத்தில் தெல்லிப்பளைப் பிரதேச செயலர் க.சிவசிறி, நகாமா நிறுவனப் பணிப்பாளர் மரிக்கார், நேர்வே போருட் அமைப்பின் திட்ட அமைப்பாளர் அனா ,பலாலி கிரமசேவகர் உட்பட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ)

# மாவனல்லை பிரதேச சபையின் தலைவர் நேற்றுப் பணி நீக்கம்!

கொழும்பு, மார்ச் 16

மாவனல்லை பிரதேச சபையின் தலைவர் நோயல் ஸ்டீபன் அந்தப் பதவியிலிருந்தும் உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டு நோயல் ஸ்டீபனை பதவிகளில் இருந்து நீக்கியுள்ளார்.

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற சட்டத்தின் 185(1) ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பில் நோயல் ஸ்டீபன் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் ஆளுநரால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# இரு விபத்துக்களில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 16

வரக்காபொல, திஸ்ஸமஹாராம ஆகிய பகுதிகளில், நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் 18 வயது இளைஞன் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கேகாலை, வரக்காபொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மீரிகம பிரதேசத்தில், மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் பலியாகியுள்ளார்.

அம்பேபுஸ்ஸ, பஹலகம பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, ஹம்பாந்தோட்டை திஸ்ஸமஹாராம, கதிரகாமம் வீதியில் பயணித்த முச்சக்கர வண்டியொன்று, இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸொன்றில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கர வண்டி சாரதி, தேபருவெள வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கொஹொம்பகஹ பெலெஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயது நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் பஸ்ஸின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கிளிநொச்சி பாடசாலைகள் முழுமையாக இயங்கவில்லை



கிளிநொச்சி, மார்ச் 16

நாடாளவிய ரீதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளின் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விச் செயற்பாடுகள் முற்றாக பாதிக்கப்பட்டன.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் சமூகமளிக்கவில்லை. ஒரு சில பாடசாலைகளில் மாத்திரம் ஒரு சில மாணவர்கள் சமூகமளித்தபோதும் கல்விச் செயற்பாடுகள் இடம்பெறவில்லை.

அத்தோடு வைத்தியசாலைகளில் அவசர நோயாளர் சேவைகள் மாத்திரம் இடம்பெற்றன. ஏனைய சேவைகள் எவையும் இடம்பெற வில்லை.

தனியார் போக்குவரத்துச் சேவைகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

அரச திணைக்களங்களில் வெளிமாவட்டங்களில் இருந்து வருகின்ற உத்தியோகத்தர்கள் பெருமளவுக்கு சமூகமளிக்கவில்லை. பொது மக்களும் அலுவலகங்களுக்கு செல்வது மிக மிகக் குறைவாக காணப்பட்டது. (அ)

# மார்ச் மாதத்தில் இதுவரை நாட்டுக்கு 53,000 சுற்றுலாப் பயணிகள் வருகை

கொழும்பு, மார்ச் 16

மார்ச் மாதத்தில் இதுவரை 53,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி மார்ச் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் 53 ஆயிரத்து 838 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளே அதிகம் என்றும் குறிப்பாக 12 ஆயிரத்து 762 ரஷ்யப் பிரஜைகள் இலங்கை வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்தியாவில் இருந்து 7,348 சுற்றுலாப் பயணிகளையும், ஜேர்மனியில் இருந்து 4,289 பேரும், பிரித்தானியாவில் இருந்து 3,937 பேரும், அமெரிக்காவிலிருந்து 2,716 பேர் இலங்கை வந்துள்ளனர்.

வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் மட்டும் மொத்தமாக 264,022 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைதந்துள்ளனர் என சுற்றுலா அபி விருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# மன்னாரில் அரச சேவைகள் முடக்கம்




மன்னார், மார்ச் 16

நாடளாவிய ரீதியில் பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் காரணமாக நாடு தழுவிய ரீதியில் பல பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் பல பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன் பரீட்சை நடவடிக்கைகளும் பிற்போடப்பட்டன.

அதே நேரம் இலங்கை ஆசிரியர் தொழிற்சங்க போராட்டத்திற்கு மன்னார் மாவட்ட ஆசிரியர்களும் பூரண ஆதரவு வழங்கினர்.

சில பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தந்த நிலையில் ஆசிரியர்கள் பணிக்கு வராமையினால் மாணவர்கள் வீடுகளுக்கு திரும்பிச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

அதே நேரம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதாரப் பணியாளர்களும் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்த நிலையில் அத்தியாவசியமான அவசர சேவை பிரிவு மட்டுமே செயல்பாட்டில் இருந்தது.

வங்கி ஊழியர்கள் பகிஷ்கரிப்பு காரணமாக வங்கிச் சேவைகள் இடம்பெறவில்லை. (அ)

## நாடு முழுவதும்...

47 பிரதான தொழில்சங்கங்களின் தொழில்சங்க கூட்டமைப்பின் அழைப்பின் பேரில் இந்த வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்பட்டது.

அநீதியான வரிச் சட்டம் திருத்தப்பட வேண்டும், 20 ஆயிரம் ரூபாய் வாழ்க்கை செலவு கொடுப்பனவு, மின்சார கட்டணத்தை குறைக்க வேண்டும், அரச அடக்குமுறைகளை நிறுத்த வேண்டும், அதிகரித்த வங்கிக் கடன் வட்டி வீதத்தை குறைக்க வேண்டும், உள்ளூராட்சி தேர்தலை உடன் நடத்த வேண்டும் ஆகிய பிரதான கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட துறை களை சேர்ந்த 6 இலட்சத்து 43 ஆயிரத்து 994 பணியாளர்களில் 4 இலட்சத்து 20 ஆயிரத்து 424 தொழிலாளர்கள் அதாவது 65 சதவீதத்தினர் நேற்றைய தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்று அரச புள்ளிவிவரம் தெரிவித்தது.

**கல்வித்துறை**

வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அதிபர், ஆசிரியர் சங்கங்கள் ஆதரவளித்திருந்தன. இதனால், பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் செல்லவில்லை. இதனால், நாடு முழுவதும் பாடசாலைகள் இயங்கவில்லை. இபோன்று, பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர் சங்கங்கள் - கல்வி சாரா ஊழியர்கள் சங்கங்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டன. இதனால், பல்கலைக்கழக நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டன.

இதேநேரம், வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பெரும்பான்மையான மாவட்டங்களில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளில் ஈடுபட்டிருந்தனர். இதேநேரம் யாழ்ப்பாணம், வவுனியா, கிழக்கு, தென்கிழக்கு பல்கலைக்கழகங்களில் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன.

அரச தகவலின்படி 92 வீதமான அதிபர், ஆசிரியர்கள் கடமைகளில் இருந்து விலகினர். இதேபோன்று 77 வீதமான பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் 87 வீதமான கல்வி சாரா ஊழியர்களும் கடமைகளில் இருந்து விலகினர்.

**சுகாதாரத் துறை**

அரச மருத்துவர்கள் சங்கத்தினர் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்த அதேசமயம் தாதியர்கள் சங்கமும் இதற்கு ஆதரவளித்தது. இதனால், நாட்டின் பெரும்பான்மையான மருத்துவமனைகளின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. எனினும், அவசர சேவைப் பிரிவுகள் மட்டும் இயங்கின. திங்கட்கிழமை முதல் நடத்தப்பட்ட தொடர் பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் பலவிதமான சிரமங்களை எதிர்கொண்டனர்.

அரச தகவலின்படி 63வீதமான மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

**போக்குவரத்து துறை**

புகையிரத தொழில் சங்கங்களே போராட்டத்தில் ஈடுபட்டன. எனினும், நேற்று காலை 20 ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டன புகையிரத பொது முகாமையாளர் அறிவித்திருந்தார். இதனிடையே, ரயில் நிலையங்களில் இராணுவம் குவிக்கப்பட்டு பெரும் பாதுகாப்புக்கு மத்தியில் இந்த ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

57வீதமான ரயில் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்று அரசு தெரிவித்துள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவைகள் வடக்கு - கிழக்கில் பெரியளவில் பாதிக்கப்படவில்லை. இதேவேளை, 8 தொழில் சங்கங்களில் 7 தொழில்சங்கங்கள் சேவையில் ஈடுபட்டன என்று இ. போ. ச. தலைவர் தெரிவித்திருந்தார். இதேசமயம், தனியார் பேருந்து சங்கம் வழமைபோன்று சேவையை தொடர்ந்தது.

**வங்கி சேவைகள்**

வங்கி சேவைகள் முற்றாக முடங்கவில்லை. எனினும், மிகமந்தகதியிலேயே பணிகள் முன்னெடுக்கப்பட்டன. மக்கள் வங்கியின் 352 கிளைகளில் 330 கிளைகள் இயங்குகின என்று அந்த வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி கூறியிருந்தார். இதேபோன்று, இலங்கை வங்கியின் 340 கிளைகளில் 272 கிளைகள் இயங் கின என்று அந்த வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி கிளைவ் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

எனினும், அரச, தனியார் வங்கிகளின் 64 வீத பணியாளர்கள் புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்று அரச தகவல் பிரிவு தெரிவித்தது.

**தபால் சேவைகள்**

தபால் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்த போதிலும் , தபால் அலுவலகங்கள் மற்றும் உப தபாலகங்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. இதனால் மத்திய தபால் பரிமாற்றல் சேவைகளும் முற்றாக முடங்கிக் காணப்பட்டது.

நாடு முழுவதும் 92 வீதமான தபால் சேவை ஊழியர்கள் பணிப்பு றக்கணிப்பில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று துறைமுக சேவைகளில் 83 வீதத்தினரும் இலங்கை மின்சார சபையில் 79 வீதத்தினரும் அபிவிருத்தி திட்ட பணிகளில் 59 வீதத்தினரும் முகாமைத்துவ உதவியாளர்களில் 52 வீதத்தினரும் விவசாயம் சார் நடவடிக்கைகளில் 43 வீதத்தினரும் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ - 01, 02, 03, 06, 07)

## தென்னிந்திய...

பெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாணம் சர்வதேச விமானம் நிலையம் ஊடாக மேற்கொள்ளப்படும் யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவையூடாக பலர் நன்மையடைந்து வருகின்றனர். இந்த சேவையை எப்படி நீடிப்பது என்று ஆராய்ந்து வருகின்றோம்.

மேலும், யாழ்ப்பாணம் சர்வதேச விமானம் நிலையம் ஊடாக தென்னிந்தியாவின் ஏனைய நகரங்களுக்கும் சேவையை விஸ்தரிப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

மேலும் யாழ்பாணம் - கொழும்பு விமான சேவையை ஆரம்பிக்கவும் ஆராய்ந்து வருகிறோம். . இது தொடர்பான நல்ல செய்தி விரைவில் கிடைக்கும் - என்றார். (ஐ)

## பறிபோனது...

பார்ப்பதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டுகளில் “இது அநுராதபுர காலத்தில் பயன்படுத்தப்பட்டது. தொல்லியல் சான்றுகளால் நிரூபிக்கப்பட்ட பௌத்த மத வளாகத்தில் இது அமைந்திருக்கிறது”, என்று கூறப்பட்டுள்ளது.

இந்த வெந்நீரூற்று புராண - இதிகாச காலத்துடன் தொடர்புடையது. இலங்கையை ஆண்ட இராவணன் தனது தாயாருக்கு இறுதிக் கிரியை செய்வதற்காக இந்த 7 கிணறுகளையும் அமைத்தான் என்று இந்துமத நூல்கள் கூறுகின்றன. இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்து தமிழ் மக்கள் தங்களின் புனித இடமாக கன்னியா வெந்நீரூற்றை பேணி வந்திருந்தனர். ஆனால், இப்போது இதனை பௌத்தத்துடன் மட்டும் தொடர்புபடுத்தி வரலாறு மாற்றப்பட்டுள்ளதாக குற்றஞ் சாட்டப்பட்டது. (ஐ)

(தொடர்புடைய மற்றொரு செய்தி பக்கம் 11இல்)

# வெளிப்படை தன்மையுடனேயே கடன் நெருக்கடிக்கு தீர்வு முயற்சி!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, மார்ச் 16

கடன் நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் பொருளாதாரத்தை மீளமைப்பதற்கும் முழுமையான வெளிப்படைத் தன்மையை இலங்கை பேணுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களுக்கு அவர் அனுப்பியுள்ள பகிரங்கக் கடிதத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பு மற்றும் தனியார் கடன் வழங்குநர்களுக்கு இடையே பரஸ்பர ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதன் மூலம் அரச கடன் நெருக்கடியை முன்கூட்டியே தீர்க்க இலங்கையுடன் சாதகமாக செயல்படுமாறும் ஜனாதிபதி அந்தக் கடிதத்தில் கோரியுள்ளார். (ஐ)

### நிதி இல்லை; தேர்தல் நடப்பது சந்தேகம்!

# உள்ளூராட்சி தேர்தல் குறித்து இன்று முடிவு அறிவிக்கப்படும்!

## தேர்தல் ஆணைக்குழு தலைவர்

கொழும்பு, மார்ச் 16

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடத்த முடியுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அரச நிறுவனங்களின் ஒத்துழைப்பு அதிருப்தியளிக்கின்றது. அரசாங்கம் நிதி வழங்கினாலே தேர்தலை நடத்தலாம். இன்றைய தினம் இந்த விடயங்கள் குறித்து பேசி ஒரு முடிவு அறிவிக்கப்படும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும்,

தபால்மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுக்களை புதன்கிழமை (நேற்று) தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பதாக அரச அச்சகம் கூறியது. ஆனால், வாக்குச்சீட்டுகள் வழங்கப்படவில்லை. நிதி நெருக்கடி காரணமாக வாக்குச்சீட்டு அச்சிடல் பணி நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. ஆனால், எமக்கு உத்தியோகபூர்வமாக எந்த அறிவிப்பும் தரப்படவில்லை.

தேர்தலை நடத்தும் பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருந்தாலும், அரசமைப்பின் பிரகாரம் தேர்தல் நடவடிக்கைகளுக்கு அனைத்து அரச நிறுவனங்களும் அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தேர்தல் செயல்பாடுகளுக்கு அரச நிறுவனங்களின் ஒத்துழைப்பு போதுமானதாக அமையவில்லை. இழுபறி நிலை காணப்படுகிறது.

திட்டமிட்ட வகையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்பை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடத்த முடியுமா என்ற சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது. நிதி விடுவிப்பில் தொடர்ந்தும் தாமதம் நீடிக்கிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது குறித்து நாளை (இன்று) முற்பகல்10 மணிக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் விசேட பேச்சு இடம்பெறவுள்ளது, பேச்சைத் தொடர்ந்து ஒரு தீர்மானம் அறிவிக்கப்படும் - என்றார். (ஐ)

# வேலை நிறுத்தத்தால் ரூ. 4,600 கோடி இழப்பு?

கொழும்பு, மார்ச் 16

நாட்டில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஒரே நாளில் 4 ஆயிரத்து 600 கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்படும் என்று கூறினார் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய.

நேற்றைய தினம் 47 பிரதான தொழில்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டன. இந்த நிலையில், நேற்று மதியம் இராஜாங்க அமைச்சரை சந்தித்த செய்தியாளர்களிடமே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(ஐ)

## அமைச்சரவை...

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை ஒப்பந்தம் செய்து கொள் வதற்கு முன்னர் புதிய அமைச்சரவை பதவியேற்பது சாத்தியமில்லை என்று அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## ஷஹ்ரானின்...

25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ரொக்கப் பிணை, 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீர பிணைகளில் அவரை செல்ல அனுமதித்தது. அத்துடன், வெளிநாடு செல்லவும் தடை விதிக்கப்பட்டது. மேலும் மாத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் குற்றப் புலனாய்வு பிரிவு பணிமனையில் அவர் கையொப்பமிட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

அத்துடன், இது தொடர்பான வழக்கு எதிர்வரும் மே 17, 18ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ - 01)

## பணிப்...

செயல்படுத்தப்பட வில்லை என்றும் அவர் கூறினார்.

நேற்று பணிப்பகிஷ்கரிப்பு நடைபெற்ற போதிலும் அத்தியாவசிய சேவைகள் தொடர்ந்து இடம்பெற்றன என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அத்துடன், நாடளாவிய ரீதியில் 265 இலங்கை வங்கிக் கிளைகளும், 272 மக்கள் வங்கிக் கிளைகளும் செயல்பட்டன என்று அந்தந்த வங்கிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

மட்டு. ஈழநாடு
Eelanadu

# இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்!

**யாழ்ப்பாணம், மார்ச் 16**

**இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் நேற்று யாழ்ப்பாணம் பஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர் சம்பள அதிகரிப்பை வழங்க கோரியும் வரி அறவீட்டை நிறுத்தக் கோரியும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**




இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் தலைமையில் இந்த போராட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் - 20000 உதவித் தொகையை உடனடியாக வழங்கவேண்டும், மூன்றில் இரண்டு பங்கு சம்பளத்தை வழங்கவேண்டும், மாணவர்களின் போசனைக் குறைபாட்டை நிவர்த்தி செய்!, பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களைக் கொடு உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரும் கலந்து கொண்டனர். (அ)

# ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சி

*கொழும்பு, மார்ச் 16*

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்றும் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று வீதத்தின்படி, நேற்றைய தினம் அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 327 ரூபா 59 சதமாகவும், விற்பனை பெறுமதி 344 ரூபா 66 சதமாகவும் பதிவாகியுள்ளது.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் இருந்து அமெரிக்க டொலர் மற்றும் ஏனைய முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பு உயர்ந்து வந்திருந்தது.

எனினும், கடந்த வெள்ளிக்கிழமை முதல் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் மதிப்பு மீண்டும் சரிந்து வருகிறது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 319 ரூபா 84 சதமாகவும், விற்பனை பெறுமதி 335 ரூபா 68 சதமாகவும் பதிவாகியிருந்தது.

# ரயில் நிலையங்களுக்கு கடும் பாதுகாப்பு ஏற்பாடு

*கொழும்பு, மார்ச் 16*

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக அனைத்து ரயில் நிலையங்களிலும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புப் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், அரச நிறுவனங்களில் ஊழியர்களின் வருகை குறைந்து காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையே, வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் மருந்து விநியோகம் உட்பட மருத்துவ மற்றும் ஆய்வக நடவடிக்கைகள் தடைப்பட்டன.

இதேவேளை, நாடளாவிய தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவளிக்கும் வகையில் தாம் சட்டப்படி வேலையை முன்னெடுத்துள்ளதாக இலங்கை விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வரும் மற்றும் அங்கிருந்து புறப்படும் விமானங்களில் சிறிது தாமதம் ஏற்படக்கூடும் என அந்த சங்கத்தின் தலைவர் திசர அமரானந்த தெரிவித்தார். (அ)

# மேலும் 4 நாடுகள் இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு ஒப்புதல்

*கொழும்பு, மார்ச் 16*

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்களை மறுசீரமைக்க நான்கு நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தனது ருவிற்றர் கணக்கில் பதிவிட்டுள்ளார்.

சவூதி அரேபியா, பாகிஸ்தான், ஹங்கேரி, குவைத் ஆகிய நாடுகள் இலங்கையின் சார்பில் சர்வதேச நாணய நிதியத்திற்கு நிதி உத்தரவாதம் வழங்கியுள்ளதாக அலி சப்ரி சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இலங்கைக்கு நிதி உத்தரவாதம் வழங்கிய இந்தியா, பாரிஸ் கிளப் மற்றும் சீனாவுக்கு மீண்டும் ஒருமுறை சப்ரி நன்றி தெரிவித்துள்ளார். (அ)

# மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் குடு சலிந்து நேற்று மனு தாக்கல்

*கொழும்பு, மார்ச் 16*

மடகாஸ்கரில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட போதைப்பொருள் கடத்தல் காரரான 'குடு சலிந்து' எனப்படும் சலிந்து மல்ஷிக நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

தனது உயிர் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி தாய் ஊடாக இந்த மனுவை அவர் நேற்று தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மனு மீதான நிலைப்பாட்டை எதிர்வரும் 20ஆம் திகதி அறிவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

# தகவல் தொழில்நுட்பத்துக்கு தனியான பல்கலைக்கழகம்

*கொழும்பு, மார்ச் 16*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்தும் வகையில் கணினி மற்றும் தகவல் தொழிநுட்பத்திற்கான தனியான பல்கலைக் கழகம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டியது முக்கியமானது என யோசனை தெரிவித்துள்ளார்.

அரச பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவது தொடர்பாக உரிய பரிந்துரைகளை வழங்குவதற்கான பாராளுமன்ற விசேட குழுவில் அமரதுங்க இதனைத் தெரிவித்தார்.

உயர்கல்வித் துறையில் மேற்கொள்ளப்படவேண்டிய மாற்றங்கள் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் மேற்படி குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாகர்கோவில் மேற்கு பகுதியில் வன்முறைக் கும்பல் அட்டகாசம்

## மோட்டார் சைக்கிள் தீக்கிரை





*வடமராட்சி, மார்ச் 16*

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாகர்கோவில் மேற்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் செவ்வாய் இரவு இனந்தெரியாத நபர்கள் பெற்றோல் குண்டு வீச்சு மேற்கொண்டுள்ளனர்.

இந்த தாக்குதலில் ஒரு மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன் இன்னொரு மோட்டார் சைக்கிள் பகுதியளவில் எரிந்து சேதமாகியுள்ளது.

அத்துடன் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

எனினும் இந்த வன்முறைச் சம்பவத்தை மேற்கொண்டவர்கள் யார்என இதுவரை தெரியவரவில்லை.

இச்சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-02)

# எரிபொருள் விநியோகத்தில் எந்தவித பாதிப்பும் இல்லை

*கொழும்பு, மார்ச் 16*

எரிபொருள் விநியோகம் எவ்வித தடையுமின்றி முன்னெடுக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்தது.

பல துறைகளில் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்ததால் சில நடவடிக்கைகள் முடங்கின.

இந்த நிலையில், எரிபொருள் விநியோகம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதன்படி, போதுமான அளவு பெற்றோல் மற்றும் டீசல் கையிருப்பில் உள்ளதென இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முறையத்தின் தலைவர் எம். யூ. மொஹமட் இதனை உறுதிப்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

தற்போது, 6,600 லீற்றர் பெற்றோல் மற்றும் டீசல் இருப்பை கொண்ட 300 தாங்கி ஊர்திகள் வழக்கமான எரிபொருள் விநியோகத்திற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதென எம். யூ. மொஹமட் அறிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் கூறியது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.